# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

1—8—71

★

உள்ளே......


காமவேள் நடனசாலை
யில் கற்பூரக் கடை!
(அறிஞர் அண்ணா)

வன்முறை வளர்கிறது!
(தலையங்கம்)

இராசமன்னர் குழு
அறிக்கை
(மொழிக் கட்டுரை)

அண்ணாமலை நகரில்
நடந்தது என்ன?
(கலைஞர் சட்டமன்ற உரை)

சோழமாதேவி
(தொடர் கதை)


விலை 20 காசு



கலைஞர் டாக்டர் ஆகிறார்!

# அண்ணாமலை நகரில் நடந்தது என்ன?

## முதல்வர் கருணாநிதி விளக்கம்!

'என்னைப் பொறுத்தவரையில், இந்த அவையில் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்—சரியாகவோ, தவறாகவோ எந்த ஒரு மாணவன் மீதும் ஓர் அடி விழுந்தால், அந்த அடி என்மீது விழுந்ததாகவே கருதுபவன் நான்' என்று!

"அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்ததைப்பற்றி எதிர்க் கட்சியினர் ஏதோ, 'வரலாறு காணாத சம்பவம்—வரலாறு காணாத நிகழ்ச்சி" என்றெல்லாம் வர்ணித்தார்கள்; வரலாறு என்பது 1967-க்குப் பிறகுதான் உருவாக்கப்பட்டதா? 1965-ல் நான் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது, 46 இடங்களில் துப்பாக்கிச்சூடு நடத்தி, மாணவர்களைச் சுட்டுத்தள்ளியது வரலாறு அல்லவா? 'வார்த்தை அழகாக இருக்கிறது' என்று சொன்னால், அதில் உண்மை இருக்க வேண்டாமா?

"அண்ணாமலை நகரில் நடந்தது ஒரு தடியடிதான்; இன்னும் சொல்லப்போனால், தடியால்கூட அடிக்கவில்லை—பிரம்பால்தான் அடித்தார்கள்.

"பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடிருந்த காலத்தில் 1965-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பில்—நாங்கள் ஆர்வம் கொண்டிருந்தோம் என்பது உண்மை; அப்போது ஆளுங்கட்சியில் இருந்தவர்களில்கூடச் சிலர் அதற்கு அனுதாபம் காட்டினார்கள் என்பதை — இதோ எதிரில் இருப்பவர்களே—புன்முறுவல் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; அப்போது, 'வன்முறை கூடாது' என்று அண்ணா அவர்கள் அறிக்கைமேல் அறிக்கை விடுத்த பிறகும், 'மாணவர்கள் வன்முறையில் ஈடுபடுவார்களானால், அப்படிப்பட்டவர்களை, மாணவர்களாக ஏற்றுக்கொள்ள முடியாது' என்று அப்போது நீங்கள்கூட (அவைத் தலைவர்) எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் இந்த அவையில் எடுத்துக் கூறியிருக்கிறீர்கள்.

"எனவே, அண்ணாமலை நகரில் நடந்தது என்ன என்பதைப் பற்றிக்கூடச் சரியாக அறிந்துகொள்ளாமல், அதிலே 'நக்சலைட்'டுகள் கலந்துகொண்டிருக்கிறார்களா என்பதைக்கூடப் பாராமல், 'விரோதிக்கு விரோதி நண்பன்' என்ற முறையில் எதிர்க்கட்சியினர் பேசுவார்களானால், அவர்கள், வேண்டத்தகாத வன்செயலுக்கு வித்திடுகிறார்கள் என்றுதான் பொருள்"

—என்று முதலமைச்சர் திரு கருணாநிதி அவர்கள், சட்டப் பேரவையில், எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் கூறினார்.

அங்கு, அன்றையத்தினம் நடந்த சம்பவங்களை விளக்கி முதலமைச்சர் கூறியதாவது:—

"சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே! சென்ற 23-ம் நாளன்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில், எனக்கும் ஒரு பட்டத்தைத் தந்ததுபற்றி இந்தப் பேரவையில் பாராட்டிப் பேசினீர்கள் என்பதை அறிந்து மகிழ்ந்தேன்; என்றாலும், உள்ளபடியே அன்றையத்தினம் நிலைமை வேறுவிதமாக இருந்திருக்குமானால், அதே நாளில் இந்த மாமன்றத்தில் எனக்காக மௌனம் அனுஷ்டிக்கும் நிலை ஏற்பட்டிருக்கக்கூடும்.

நான் பொதுப்பணித் துறைப் பயணிகள் இல்லத்தில் அன்று தங்கியிருந்தேன்; என் உயிருக்கே ஆபத்து விளைவிக்கும் ஏற்பாடுகள் நடைபெறுவதாக அறிந்த போலீசார் பலத்த பாதுகாப்புச் செய்திருந்ததால், இன்று நான் மீண்டும் வந்து—இந்த மன்றத்தில் உங்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எந்தத் தீவிரவாதிகள்—இருக்கிறார்கள் என்பதும், சில மாணவர்கட்கு நக்சலைட் இயக்கத்துடன் தொடர்பு உண்டு என்பதும், தென்னாற்காடு மாவட்ட வெடிகுண்டுச் சம்பவம் மூலம் நாடறிந்த உண்மையாகும்.

எனக்குப் பட்டம் வழங்கியதுபற்றி கே. டி. கே. தங்கமணியும், சுப்பு அவர்களும் பெரியமனது வைத்துப் பாராட்டுத் தெரிவித்தார்கள்; அவர்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'எனக்குப் பட்டம் வழங்குவது கூடாது' என்ற அடிப்படையில்தான் கிளர்ச்சியே தோன்றியது.

'கறுப்புக் கொடி காட்டுவது என்பது சனநாயகத்துக்குட்பட்டதுதான்' என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் சுட்டிக்காட்டியதை நாங்கள் என்றும் மறுத்ததில்லை; சனநாயகத்தில் அது அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான்; இதனை தி. மு. கழகம் பல்லாண்டுகளாகச் சொல்லிக்கொண்டுதான் வந்திருக்கிறது.

தி. மு. கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது பல முறை, பல தலைவர்கட்கும்—மத்திய அமைச்சர்கட்கும் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறது!

கறுப்புக்கொடி காட்டுவது என்றால், 'குறிப்பிட்ட நேரத்தில்—குறிப்பிட்ட இடத்தில் இன்னின்னார் முன் நின்று கறுப்புக்கொடி காட்டுவார்கள்' என்று முன்கூட்டியே அறிவித்து போலீசார் அனுமதிக்கின்ற இடத்தில் இருந்து கறுப்புக்கொடி காட்டிப் பழக்கப்பட்டவர்கள் தி மு. கழகத்தவர்!


ஆனால் அண்ணாமலை நகரில், கறுப்பக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக முன்கூட்டி அறிவிக்கவுமில்லை—இன்னார்தான் காட்டப்போகிறார்கள்' என்று கூறி இடம் ஒதுக்கித் தரவும் கேட்கவில்லை; 22ம் நாள் இரவுதான் துண்டறிக்கை வெளியிடப்பட்டது... 'நாடோடிப் பாட்டுப் பாடுபவனுக்குப் பட்டமா?" என்று அதில் கேட்கப்பட்டிருந்தது.

நாடோடியான நாங்கள் நாடாள வந்த பிறகும் எங்களுககுப் பட்டம் அளிப்பதை எதிர்க்கிறார்கள் என்றால், பட்டம் கொடுத்த அந்தப் பல்கலைக் கழகத்தை அவமதிக்கிறார்கள் என்றுதான் பொருள்!

'நாடோடிப் பாட்டு எழுதுபவன்' என்று என்னைச் சொன்னார்கள்; ஆம்... நான் நாடோடிப் பாடல் எழுதியவன்தான்; உத்தமர் காந்தியடிகளைப் பற்றிப் பாட்டு எழுதியிருக்கிறேன்... பண்டித நேரு அவர்களைப் பற்றிப் பாடியிருக்கிறேன்... சுப்பிரமணிய பாரதியைப்பற்றி எனக்குத் தெரிந்ததை எழுதியிருக்கிறேன்... தாழ்ந்த சமுதாயத்தைப் பற்றிக் கவிதைகள் எழுதியிருக்கிறேன்.

மேலும் அந்தத் துண்டறிக்கையில், நான், 'ஹேமாவதி அணை கட்டினால் என்ன? நமக்குத்

(4-ம் பக்கம் பார்க்க)



# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 1—8—71 | இதழ் 3


# வன்முறை வளர்கிறது?

இந்தக் கிழமை, அண்ணுமலை நகரில் நடந்த வன்முறைச் செயல்களுக்கு, தமிழகத்து சில அரசியல் கட்சிகளும், சில ஏடுகளும், இதழ்களும் தத்தம் இதயத்தில் கவிந்துள்ள எண்ணங்களுக்கு வடிவம் தருவது போன்ற தன்மையில் விமர்சனங்கள் செய்து கொண்டுவருவது, உண்மையிலேயே தமிழ்நாட்டின் துர்ப்பாக்கியம் என்றுதான் கருதத் தோன்றுகிறது.

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணுநிதி அவர்களுக்கு அண்ணுமலைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்ததை, பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொள்ள முடியாத இழிந்த இதயம் படைத்த சிலரது தூண்டுதல்களும், இந்தத் தூண்டுதலின் பின்னே நக்சலைட் என்ற பயங்கர இயக்கமிருக்கிறதென்பதும் தெளிவாக அறிவிக்கப்பட்டிருப்பதற்குப் பிறகும், விமர்சனங்களின் தன்மைகள், தமிழகத்தின் அமைதியைக் கெடுக்கக்கூடிய முறையிலே அமைந்து வருகின்றன.

டாக்டர் கலைஞர் அவர்கள், அந்த வன்முறைச் செயல்கள் மூலம், முதலமைச்சர் அவர்களது உயிரையே பறித்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது என்பதற்கும், அந்த முறையிலேயே வன்முறைத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன என்பதற்கும், முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலேயே சில புகைப் படங்களைக் காட்டி இருக்கிறர்.

இந்த பயங்கரச் சதித் திட்டத்தை, காவல் துறையினர் சிறந்த முறையில் முறியடித்து கலைஞரது உயிரைக் காப்பாற்றித் தந்திருக்கிருர்கள். அதற்காக அந்தத் துறையினருக்கு ஆயிர மாயிரம் முறை நன்றி செலுத்திக் கொள்ள வேண்டும் நாடு.

கலைஞரது உயிரைக் காக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்பதன் போரால் கூட அல்ல. சட்டம் ஒழுங்கைக் குலைத்துக் கொண்டிருந்தார்கள் என்பதன் காரணமாகத்தான், அண்ணுமலை நகரில் சிறிய தடியடி நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் தடியடியின் காரணமாக மிகக் குறைந்த எண்ணிக்கையினரே காயமடைந்திருக்கின்றனர். யாரும் உயிர் துறந்துவிடவில்லை. உயிர் துறந்திருப்பதாகக் கூறப்படும் ஒருவர்கூட, சம்பவங்களில் தொடர்புடையவர் என்று எவராலும் எடுத்துக் காட்டப்படவில்லை. தொடர்பு படுத்தி செய்தி வெளியிட்டிருந்த நாளிதழ் ஒன்று கூட, மறுநாளே மறுப்புச் செய்தி வெளியிட்டுத் தன் தவறினைத் திருத்திக் கொண்டிருக்கிறது.

எனவே, நாசவேலைக் கும்பல் ஒன்றின் சதித் திட்டம் காரணமாகவே, அண்ணுமலை நகர் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்பது நிரூபிக்கப்பட்டு விட்ட பிறகும், அது தொடர்பான விமர்சனங்கள், நாட்டுக்கு அமைதிக் கேடு உண்டாக்கக்கூடிய அளவில் மாறிக் கொண்டிருப்பதிலிருந்து — அந்த வகையிலே சில கட்சிகள் பேசவும் எழுதவும் முற்பட்டிருப்பதிலிருந்து, அத்தகைய கட்சிகள்கூட அந்த வன்முறைச் செயல்களில் . பங்கு பற்றிக் கொண்டிருக்கின்றனவோ என்று ஐயுறத் தோன்றுகின்றது.

வன்முறைச் செயல்கள், எங்கு எவரால் நடத்தப் பெறுவதானுலும், அவை அடக்கி ஒடுக்கப்பட வேண்டியவைகளே யாகும் என்பதில் எந்தக் கட்சியும் மாறுபாடான கருத்துக் கொண்டிருக்க முடியாது.

நாட்டில் முழு அமைதி நிலவ வேண்டும் என்பதிலே அக்கறை கொண்டுள்ள எந்த அரசியல் கட்சியும், வன்முறைச் செயல்களுக்கு ஊக்கம் அளிக்க முன்வராது. அதுவும் நக்சலைட் வன்முறைகள் என்றுல். நாட்டு நலன் பேணும் எந்த கட்சியும் அந்தத் திசையைக் கூடத் திரும்பிப் பார்க்காது.

அண்ணுமலை நகர் வன்முறைச் செயல்கள், முதலமைச்சர் அவர்களது உயிரையே பறித்துக் கொள்ளக்கூடிய அளவிலான நக்சலைட் வன்முறைகள் என்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கும்போது, அந்த வன்முறைகளை ஊக்குவிக்கத்தக்க முறையிலே சில கட்சிகள் இயங்கத் தொடங்கி இருப்பதன் காரணத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது; புரிந்து தெளிந்துகொள்ள வேண்டியவர்கள் தமிழ் நாட்டு மக்களேயாவர்.

தலைநீட்டிப் பார்க்கும் இந்த வன்முறை வெங்கொடுமைகள், சரியானபடி அடக்கி, ஒடுக்கப்பட வேண்டுவதற்கு மக்கள் ஒத்துழைப்புக் கொடுக்கத் தவறினுல், விளைவுகள் விவரீதமாகத்தான் போய்க் கொண்டிருக்கும். எச்சரிக்கை செய்ய வேண்டுவது நமது கடமையாகும்.

# உடுமலை நாராயணன் மறைவு

மனேவலிமை மிகுந்தவர்களால் மட்டுமே அதிர்ச்சிகளைத் தாங்கிக்கொள்ள முடியும். அப்படிப்பட்டவர்களால்கூட அடுத்தடுத்த அதிர்ச்சிகளைத் தாங்கிக்கொள்ள முடிமாமற் போய்விடக் கூடுமே!

அண்மையில்தான் சலகண்டபுரம் ப. கண்ணன் அவர்களைப் பறி கொடுத்தோம்; அடுத்து சேலத்துப் பெரியாராம் ஜி, பி எஸ். அவர்களை இழந்தோம். அந்தத் துயரின் சோகச் சூழல்கள் மறைவதற்குள் இன்னொரு செய்தியாம்! உடுமலை நாராயணன் மறைந்து விட்டாராம்!

ஆமாம், மறைந்துவிட்ட செய்தியினை, மறைந்து விட்டாராம் என்று எழுதிப் பார்த்துத்தான் ஆறுதல் அடைய வேண்டியிருக்கிறது. ஏனென்றுல் கோவை மாவட்டத்தில், நாராயணன் அவர்களுடைய பணி அந்த அளவுக்கு மிகுந்திருந்தது. அவருடைய அயரா உழைப்புத்தான், கோவையை இன்று நமது கோட்டையாக்கி இருக்கிறது.

வாழவேண்டிய வயதில், வரலாருக மாறிவிட்டிருக்கிருர் உடுமலை நாராயணன்!

இழப்பு ஈடு செய்ய முடியாதது; குடும்பத்தாரது துயரத்தில், நம்மையும் இணைத்துக்கொண்டு, ஆறுதல் பெற முயல்கிருேம்.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தண்ணீர்தானே தேவை?' என்று பேசியிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த மாமன்றத்திலிருப்பவர்கள் நான் பேசியதை அறிவார்கள்; 'காவிரியில் அணை கட்டுவதை ஆட்சேபிக்கவில்லை; ஆனால், நமது உரிமையை விட்டுக்கொடுக்கப் போவதில்லை' என்றுதான் நான் பொதுப்பணி அமைச்சராக இருந்தபோதும்—முதலமைச்சராக ஆன பிறகும் பேசியிருக்கிறேன்; அதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆதரவு தந்து பேசியிருக்கிறார்கள்.

இப்படித் துண்டறிக்கை வெளியிட்டவர்கள், 'மாணவர் சங்கம், அண்ணாமலை நகர்' என்று கூறப்பட்டிருந்தது.

மற்றொரு துண்டறிக்கையில், 'இந்திய மாணவர்கள்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது; இந்த 'இந்திய மாணவர்'கள், 'உலகில் 14 சோஷலிச நாடுகளைத் தவிர வேறு எந்த முதலாளித்துவ நாடுகளாலும் வேலையில்லாத திண்டாட்டத்தைத் தீர்க்க முடியாது; அமெரிக்காவில்கூட 43 இலட்சம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள்' என்று கூறியிருக்கிறார்கள்.

இந்தத் துண்டறிக்கைகளும், முதல் நாள் இரவுதான் வெளியிடப்பட்டன.

இதோ—இந்தப் படத்தைப் பார்த்தால் புரியும் (புகைப் படத்தை முதல்வர் அவையில் காட்டினார்) —நானும், கவர்னர் பெருமானுக் கென்ற வண்டிகளின் முன்னே ஆர்ப்பாட்டக்காரர்கள் கறுப்புக் கொடி காட்டினார்கள்; அவர்கட்கும் போலீசுப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருந்தது; நாங்கள் பட்டமளிப்பு மண்டபத்துக்குள் செல்லும் முன்பாக எம். எல். ஏ.-க்களும், நகராட்சித் தலைவரும் வந்த கார்களைச் சுற்றி வளைத்துக் கற்களை வீசியிருக்கின்றனர்; போலீசார் மீதும் கற்களை வீசிக் காயமேற்படுத்தி யிருக்கின்றனர்.

'பட்டம் வாங்க வந்தவர்களையும் உள்ளே போலீசார் அனுமதிக்கவில்லை' என்று கூறுவது சரியல்ல; இதற்கு முன் எந்த ஆண்டும் வந்திராத அளவுக்கு இந்த ஆண்டு அதிகமாக எண்ணிக்கையினர் நேரில் பட்டம் வாங்க வந்திருந்ததாக அறிவிக்கப்பட்டது; சென்ற ஆண்டு 600 பேர் பட்டம் வாங்க வந்திருந்தார்கள் என்றால், இந்த ஆண்டு 800 முதல் 900 பேர் வந்திருந்தனர் என்று கூறப்பட்டது.

மண்டபத்துக்குள் வந்தவர்களிடம், 'பாஸ்' இருக்கிறதா என்று வாயிலில் நின்று அனுமதித்துக் கொண்டிருந்தவர்கள் பல்கலைக் கழக அலுவலர்களே தவிர, போலீசார் அல்லர்; கறுப்புக் கொடி காட்ட வந்தவர்கள்தான் உள்ளே நுழையத் துடித்தார்கள்!

இதேபோல் சென்ற ஆண்டில்—டாக்டர் சந்திரசேகர் பட்டமளிப்பு விழா உரையாற்றுகையில்—பட்டம் வாங்காதவர்களையும் உள்ளே அனுமதித்ததால், அவர் உரையாற்ற முடியாத நிலை ஏற்பட்டது; தாளால் செல்யப்பட்ட ஆகாயக் கப்பல்கள் மேலே பறந்தன; கூச்சல்கள் எழுந்தன; எனவேதான், பட்டம் பெறுபவர்களைத் தவிர மற்றவர்கள்—ஜூனியர் மாணவர்கள்—உள்ளே வர இந்த முறை அனுமதிக்கப்படவில்லை.

பட்டமளிப்பு விழாவில் எந்தவித அசம்பாவிதமும் நடைபெறவில்லை; இந்த எளியேனுக்கு—அந்தஸ்தில் குறைந்தவனுக்கு—சாதியிலே கேடனாக உள்ளவனுக்குப் பட்டம் அளித்ததை, அமைதியாகக் கரவொலி செய்து வரவேற்றனர்

பின்னர் மாலையிலும், கவர்னருக்கும் எனக்கும் பல்கலைக் கழகத்தில் ஒரு நிகழ்ச்சி இருந்தது; ஆராய்ச்சி நிலையக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா மாலை 4 மணிக்கு நடைபெற்றது; அதற்கிடையில், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தினர் எனக்கு அளிக்க இருந்த வரவேற்பைக் கூட, 'வேண்டாம்' என்று சொல்லிவிட்டேன்; அவர்கள், இரவு நடந்த பொதுக்கூட்டத்தில்தான் அந்த வரவேற்பைக் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

மாலையிலும், போலீசார்மீது கற்களை எறிந்ததில், 40-க்கு மேற்பட்ட போலீசுக்காரர்கள் காயமடைந்தனர்; இரண்டே மாணவர்கள்தான்—பிரம்படி காரணமாக—மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக எதிர்க்கட்சியினர் கூறினர்; 24-ந்தேதி இரவு பல்கலைக்கழகம் அருகில் உள்ள ஆழமான குளத்தில் ஒரு பிணம் மிதந்ததாகத் தகவல் அறிந்து மாவட்ட ஆ[illegible]சித் தலைவரும் போலீசாரும் அங்கு சென்றனர்; அதை எடுக்கச் சென்றபோது, நக்சலைட் மாணவர்கள் போலீசாரைச் சூழ்ந்து கொண்டு தடுத்தனர்; பின்னர் அ[illegible]ர்களின் நிபந்தனைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு போலீசார் அந்தப் பிணத்தைக் கைப்பற்றினார்கள்; பிரேத பரிசோதனையின்போ[illegible], மாணவப் பிரதிநிதிகள் 3 பேரும், பல்கலைக்கழக டாக்டரும் உடன் இருக்க வேண்டும்' என்பது அவர்களின் நிபந்தனை.

போலீசார் அந்தப் பிணத்தை எடுத்துவைத்துக்கொண்டு, அங்குள்ள மாணவர்கள்—பேராசிரியர்கள் ஆகிய அனைவரையும், 'அடையாளம் தெரிகிறதா என்று பார்க்கச் சொன்னார்கள்; அது ஒரு மாணவரின் உடல் என்பதற்கான அடையாளத்தை எவரும் கூறவில்லை; 'அந்த நபர் யார்' என்று ஒருவராலும் அடையாளம் காட்ட முடியவில்லை; அதன் பிறகு, அங்கிருந்து கடலூர் மருத்துவமனைக்கு அப்பிணம் எடுத்துச் செல்லப்பட்டது; அங்கு மாணவப் பிரதிநிதிகள்—பல்கலைக்கழக டாக்டர்—பேராசிரியர் ஆகியோர் முன்னிலையில் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது; மாவட்ட மருத்துவ அதிகாரிதான் பரிசோதனை செய்தார்; 'அந்தப் பிணத்தின்மீது உள்காயமோ, வெளிக் காயமோ இல்லை; 'இரவு 10 மணியளவில் குளத்தில் அந்த ஆள் விழுந்திருக்க வேண்டும்' என்று கருத்தறிவிக்கப்பட்டது; இதுதான் நடந்தது.

இதை வைத்துக்கொண்டு — சம்பவத்தை மிகைப்படுத்தி — 'பரபரப்பூட்ட வேண்டும்' என்று யார் யார் நாலா பக்கமும் ஓடினார்கள் — கடலூரில் முகாமடித்துக்கொண்டு என்னென்ன செய்தார்கள்—இதனை அரசியலுக்குப் பயன்படுத்த என்ன முயற்சி செய்தார்கள்—என்பதை யெல்லாம் நான் அறிவேன்."

★

# சோழமாதேவி

ராஜிமணாளன்



[19]

## சோழதேவியின் ஏமாற்றம்!

முருக பூபதியின் உடல்நிலை மோசமடைந்து விட்டதென்றும், உடனே அவன் தமிழகத்துக்குக் கொண்டு செல்லப்பட வேண்டுமென மருத்துவர் கூறுவதாகவும், பூபதியின் கூடவே தளபதி தியாகராயனும் செல்ல விரும்புவதாகவும், அமைச்சர் முத்து முடியார் அறிவித்தது கேட்டு ஒரு கணம் அதிர்ச்சியடைந்துவிட்ட எள்ளாளச் சோழப் பேரரசருக்கு, மகாதேரர் கூறிய செய்தியைக் கேட்டதும் திகைப்பும், குழப்பமும் ஏற்பட்டுவிட்டது.

நந்திமித்திரன், மகாதேரரைச் சந்தித்ததாகவும், அந்தச் சந்திப்பின் காரணமாகவே முன்னறிவிப்புக் கூட இல்லாமல் தன்னை அவர் சந்திக்க வந்திருக்கிறார் என்றதும் குழப்ப நிலைக்குத் தான் ஆளாகிப் போனாலும், வெகு விரைவில் தன்னைச் சமாளித்துக் கொண்டார் அரசர்.

வழக்கம்போலவே, அவரது கண்கள் உள்ளே செறுகிக்கொண்டன. அடுத்த வினாடியில், கண்களின் மேலிமை, கீழிமையிலும் இரகசியம் பேசுவதுபோன்ற காட்சியினை எதிரே இருவரும் கண்டனர். அது போன்று அரசர் அமர்ந்திருக்கிறார் என்றால் தீவிரமான சிந்தனையில் மூழ்கிவிட்டார் என்பதும், திடமான ஒரு முடிவு வெகு விரைவில் உருவாகப்போகிறது என்பதும் முதலமைச்சர் முத்து முடியாருக்குத் தெரியும். ஆனால் மன்னரிடம் எத்தனையோ முறை பேசிப் பழகி இருந்தும், அதுபோன்ற ஒரு நிலையை எந்தச் சந்தர்ப்பத்திலும் சந்தித்திராத மகாதேரருக்கு ஒருபுறம் வியப்பும், இன்னொருபுறம் கவலையும் ஒரு சேர உண்டாயின.

தன் வியப்பையும், கவலையையும் தனக்கருகே அமர்ந்திருந்த முத்து முடியாரிடம் நேரிடையாகத் தெரிவிக்கும் வகையில் "மன்னரது உடல் நிலை..." என்று பேச்சுக் கொடுக்கத் தொடங்கியதும் முதலமைச்சர் குறுக்கிட்டு, 'பேச்சினை நிறுத்துங்கள்' என்று கூறும் பாவனையில் தன் கைவிரலை உதடுகளின் மீது வைத்துச் சைகை காட்டினார்.

அந்தச் சைகையின் மூலம் மன்னரது நிலைக்கு ஒரு உருவம் படைத்துக்கொண்டுவிட்டார் ஆமத்தியர். இல்லையென்றால் அவர் மகா தேரராக இருக்க முடியுமா என்ன?

மரண அமைதி அங்கே நிலவிக் கொண்டிருந்தது சில வினாடிகள் வரையில். அமைதியைக் கிழித்துக் கொண்டு, பேரரசரின் சொற்கள் வெளிப்படத் தொடங்கின.

"அமைச்சரே. நீங்கள் சென்று தளபதி தியாகராயனையும், மருத்துவரையும், எனது அந்தரங்க ஆலோசனை அறைக்கு வரப் பணித்துவிட்டு, தேவியிடம் சென்று அவர் கண் விழித்திருந்தால் அவரை இங்கு நான் வரும்படியாகக் கூறியதாகச் சொல்லுங்கள்" என்று கூறினார். உடனேயே புறப்பட எத்தனித்த முத்து முடியாரிடம், "பணியாட்கள் யாரையும் அனுப்பி விடாதீர்கள்; நீங்களே செல்ல வேண்டும் "என்று கூறிவிட்டு ஆமத்தியரின் பக்கம்திரும்பி "மகாதேரர் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்! வெகு நேரமாகக் காக்கச் செய்துவிட்டேன்" என்றார். முத்து முடியார் புறப்பட்டுப் போனார்.

"அரசாங்கக் கடமைகள் பற்றி அறியாதவன் அல்லவே நான்! முன்னறிவிப்புக் கொடுத்திருந்தால், நீங்கள் நேரம் ஒதுக்கிக்கொண்டிருக்க முடியும். அதற்கு நேரம் இல்லாது போய்விட்டது. அரசே! அரசியார் நலமா? ஆரூர் நகரத்து ஐயன் நலமா?" என்றார் ஆமத்தியர்.

வேறோர் வேளையாக இருந்திருந்தால், மன்னர் நகைச்சுவை ததும்ப, ஆவும் நலமே! கன்றும் நலமே! அரண்மனை நலமே! அலுவலர் நலமே என்று இசை இன்பம் சேர்த்துப் பதில் கூறியிருப்பார்! இப்படிக் கூற மன்னரால் இப்போது முடியவில்லை. மெள்ள இழைந்த புன்னகை ஒன்றையே பதிலாகத் தந்துவிட்டு "எப்போது உங்களை அந்தச் சிறுவன் சந்தித்தான்?" என்று கேட்டார்.

"நேற்று முதல்நாள் இரவுதான். எப்போதோ ஒருமுறை, அவனை, இந்த அரண்மனையிலேயே பார்த்திருக்கிறேன். மறைந்த தளபதி மித்திரன் தங்கை மகன் என்று அறிமுகம் செய்துகொண்டான் "என்று கூறிவிட்டு ஒருகணம் அமைதியானார். அந்த இடைவெளியில் அரசர், பார்த்தீர்களா தேரர் அவர்களே! அந்த நந்திமித்திரன், தான் வருங்காலத்தில் தமிழருக்கு எதிராக இயங்கப் போவதாகக் கூறிக் கொண்டேஇருக்கிறான். வெளிப்படையாகப் பௌத்த மதத்திலும் சேர்ந்து விட்டான். ஆனால், தன்னை மற்றவர்களிடம் அறிமுகம் செய்துகொள்ளும் நேரங்களில் மட்டும், தன்மானம் மிகுந்த ஒரு மறத் தமிழனது பெயரைச் சொல்லி, அவனது மருமகன் என்று கூறிக்கொள்கிறான். வேடிக்கையாக இல்லையா அந்தச் செயல்?" என்று கேட்டார்.

"உண்மைதான்! அவனது செயல்கள் மட்டுந்தானா வேடிக்கையானவை என்று கருதுகிறீர்கள்?

நான் புரிந்துகொண்ட மட்டில், அவனது பேச்சுக்களும்கூட வேடிக்கையானதும், சிறுபிள்ளைத்தனமானதுமாகத்தான் தெரிகிறது. உணர்ச்சிப் பெருக்கு அவனிடம் கரைபுரண்டு, உடைபட்டுக்கொண்டிருக் கண்டேன்."

"நமது தளபதி மித்திரனின் அகால மரணத்தை அவன் ஐயுறுகிறான். அதன் எதிரொலி அவனை அப்படி ஆக்கி வைத்திருக்கிறது.

"இருக்கலாம் அரசே! இப்படிப்பட்ட குறும்புத்தனம் மிகுந்த ஒருவனை, அந்த ரோகண அரசியும், அவள் மகனும் உயிர் நண்பனாகக் கொண்டிருக்கிறார்களே; அவனது ஆற்றல் ஒன்றையே, வருங்கால ரோகணரடாவின் வாழ்வுக்காக நம்பிக்கொண்டிருக்கிறார்களே! அவர்களைப்பற்றி என்ன சொல்வது? நந்தி மித்திரன் இன்னொன்றையும் சொன்னான்: தாங்கள் அவனை, இந்த அரசின் துணைத் தளபதி பொறுப்பேற்றுக் கொள்ளும்படிக் கூறினீர்களாம்! நான் வியந்தே போய்விட்டேன்."

"அது உண்மைதான் மகாதேரர் அவர்களே! நான் அவனிடம் அப்படிக் கேட்டது உண்மைதான்! ஆனால், அதனை அவன் ஏற்கமாட்டான் என்பதை நன்கு அறிவேன் நான். அவன் ஏற்றுக்கொள்ளாதது எனக்கு வியப்பளிக்கவில்லை. ஒப்புக்கொண்டிருந்தால்தான் நான், அவனைச் சந்தேகிக்க வேண்டியிருக்கும்! ஆனால், நான் அப்படிக் கேட்டதன்மூலம் அவனது உள்ளத்து உணர்ச்சியை—அவன் தமிழனாகப் பிறந்தவன் என்ற மனக் கிளர்ச்சியினைத் தூண்டிவிட்டிருக்கிறேன் என்றே நம்புகிறேன்! அந்தத் தூண்டுதலின் எதிரொலி, இன்றில்லையென்றாலும், என்றேனும் ஓர் நாள், வெகு காலத்துக்குப் பிறகு, தமிழ், தமிழர், தமிழ்நாடு என்பதைப்பற்றிச் சித்திக்கச் செய்யும் என்பது என் மதிப்பீடு."

"உங்கள் நிலையிலிருந்து, அந்த மதிப்பீடு சரியாக இருக்கலாம்! ஆனால், என்னிடம் அவன் பேசும்போது, அவனுக்குப் பயந்து கொண்டுதான் தாங்கள் அப்படிக் கேட்டதாகக் குறிப்பிட்டான். என்னால், அவன் அப்படிப் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா அரசே!"

"மகாதேரர் அவர்களுக்குத் தெரியாததையா நான் சொல்லிவிடப் போகிறேன்? ஒருவன் எதிரி என்று ஆகிவிட்டபிறகு, அப்படிப்பட்டவனிடமிருந்து ஏத்தித்தொழும் வார்த்தைகளையா நாம் எதிர்பார்க்க முடியும்?"

"என்றாலும் தாங்கள் மன்னர் இல்லையா?"

"இருக்கலாம் தேரர் அவர்களே! நாட்டு மக்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், அரசு அலுவலர்களுக்கும்தானே நான் மன்னன் என்று இருந்துகொண்டிருக்க முடியும்? ஒரு எதிரிக்கு மன்னனானால் என்ன? மடத்துச் சாமியானால் என்ன? துறவிகளுக்கே வேந்தன் துரும்பு என்று இருக்கும்போது எதிரிகளுக்கு எப்படிப்பட்ட மனோநிலை இருக்கும்? நந்திமித்திரன் குறிப்பிட்டதில்கூட கொஞ்சம் மரியாதை இழைந்திருக்குமே!"

"நீங்கள் துறவிகளுக்கெல்லாம் தலைமைத் துறவியாக இருக்கும் மனோநிலையில் பேசுகிறீர்கள்! அதற்குப் பாராட்டித்தான் தீரவேண்டும்! ஆனால் அரசே! இப்போது அந்த நந்திமித்திரன், பௌத்த தேரர்களை, தங்களுக்கு எதிராகத் திரட்டும் பணியில் விரைவில் இறங்கிவிடக்கூடும் என்று அஞ்சுகிறேன்! மதச் சாயம் பூசுகிறான் அவன்! அந்த மயக்கத்தில் தேரர்கள் மயங்கிப் போகாமல் இருக்கமாட்டார்கள்! அப்படி ஒரு நிலை உருவாகுமானால், அது ரோகணரடாவுக்குச் சாதகமாகத்தான் முடியும் என்பது உங்களுக்குத் தெரியாதா?"

"மகாதேரர் அவர்களே! இலங்கையை ஆண்ட முத்துசிவனது எட்டாவது குமாரன் அசலனைப் பொருதுநிற்க, இங்கே நான் அழைத்துவரப்பட்டேன் என்பதை நீங்கள் மறந்துவிடவில்லையே! மனுச் சோழரிடம், அப்போது தூதுவந்தவர்களில் பெரும்பாலோர் இலங்கை பௌத்த தேரர்கள்தான் என்பது எனக்கு இன்னமும் பசிய நினைவாக இருக்கிறது. பஞ்சத்தாலும், பட்டினியாலும் ஈழமக்கள் அன்றாடம் செத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தூது வந்தவர்கள் சொல்லக் கேட்கும்போது, அதனைக் கேட்கச் சகிக்காத மனுமன்னர், கண்ணீர்விட்ட காட்சியினை, அன்றாடம் நான் நினைவுக்குக் கொண்டு வந்து பார்த்துக்கொண்டே இருக்கிறேன். நான் போர் வீரர்கள் பல்லாயிரவருடன், நாகைத் துறைமுகத்தில் கப்பலேறிக் கொண்டிருந்தபோது, வெற்றி வாழ்த்துரைப்பதற்காக, நாகைப்பட்டினம் வந்திருந்த மன்னர் அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா தேரர் அவர்களே! அதுதான் மன்னர் என்னிடம் நேரடியாகச் சொன்ன கடைசிப் பேச்சு! அதுவே கடைசிச் சந்திப்பும்கூட! மனுமன்னர் சொன்னார்! "எள்ளாளா! நீ அசலனை வெற்றி காண்பதற்காக இலங்கைக்குப் புறப்படவில்லை. இலங்கை மக்கள் பசியாலும், பஞ்சத்தாலும் செத்துக் கொண்டிருப்பதைத் தடுத்து, பஞ்சத்தை வெற்றி காண்பதற்காகப் போகிறாய் என்பது உன் நினைவில் இருக்கட்டும்! நீ இலங்கையின் மன்னன் ஆகிவிடுவாய் என்பது எனக்குத் தெரியும்! ஆனால், நீ மக்களுக்கு மன்னன் என்று இருந்துகொண்டிருக்க வேண்டும்! மக்களின் மன்னன் என்று புகழ்பெற வேண்டும்" என்பதுதான் மனுச் சோழர் எனக்குக் கூறிய அறிவுரை! அதனை அறிவுரை என்பதைவிட, கட்டளை என்றே இன்றைக்கும் நான் கருதிக் கொள்கிறேன். எனவே, ஆரூர் அணிநகரத்து ஐயனின் கட்டளையை இன்று வரையில் நான் சரியாகவே செயல்படுத்தி வருகிறேன் என்பதில் எனக்கு மன நிறைவு உண்டு! இன்றைக்கு நான் அந்த மனநிறைவோடு இருந்துகொண்டிருக்க வாயில் திறந்துவிட்ட பௌத்த தேரர்கள், அவர்களே அந்த வாயிலை மூடவும் முன் வந்தால், நான் எதற்காக அதனைத் தடுக்க வேண்டும்?"

"எல்லாம் சரிதான் அரசே! ஒரு உண்மையான தவயோகியின் ஞானத்தோடு நீங்கள் பேசுகிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. ஆனால், உங்களை இங்கே அனுப்பிவைத்த மனு மன்னரது கட்டளையைப் புறக்கணிக்கிறீர்கள் என்றல்லவா என்போன்றவர்களால் எண்ணமிட நேரிடும்! உங்கள் ஆட்சியை என்போன்றவர்கள் குறை கூறவில்லை. காரணம், குறை காண முடியவில்லை. ஆனால் யாராவது சில தேரர்கள் தங்கட்கு எதிராகத் திருப்பப்பட்டுவிட்டால், அது பௌத்த மகாசபை வரையில்தான் வந்து நிற்கும். அந்த மகாசபையின் தலைவன் நான் என்கிறபோது, எனக்கு மிகவும் சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடும். அதாவது அரசே! மீண்டும் இந்த நாட்டில் பசியும், பஞ்சமும், பட்டினிச்சாவும் ஏற்பட நானே

அனுமதிக்கவேண்டும் என்றல்லவா பொருளாகிப் போகும்?" என்று கூறிவிட்டு ஆமத்தியர், இருக்கையில் சாய்ந்துகொண்டு, தனது மொட்டைத் தலையை ஒருமுறைத் தடவி விட்டுவிட்டு ஒருகணம் கண்களை மூடிக்கொண்டார்.

"மகாதேரர் அவர்களே! நீங்கள் அணிந்துகொண்டிருக்கும் இந்த மஞ்சள் ஆடைக்கு எந்த அளவுக்குப் புனிதம் இருப்பதாகக் கூறுவீர்களோ, அந்த அளவுக்குச் சற்றும் குறையாத அளவுக்கு, எனது வார்த்தைகள் புனிதமுடையனவாக இருப்பதில் நான் ஒவ்வொரு விநாடியும் அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் எடுத்துக்காட்டுகிறபடி, என் புனிதமான கருத்துக்கள், எனக்கு எதிராக, திசை திருப்பி விடப்பட்டு, திசை திருப்பப்பட்ட வழியில் என் மதிப்புக்குரிய தேரர்கள் நடையிடத் தொடங்குவார்களானால், அதை நான் தடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் எதுவுமில்லையே!"

"மறுபடியும், உங்களது மன விரக்தியினைத்தான் காட்டுகின்றன உங்களது பேச்சுக்கள். இலங்கை அரசியலில், இந்த அரசியலின் வருங்கால வரலாற்றுக்கு நந்திமித்திரனது பங்கு அத்துணை முக்கியத்துவமுடையதாக இருக்கக்கூடாது என்பதுதான் என் விருப்பம். அப்படித்தான் நீங்கள்கூட செயல்படவேண்டும் என்பது எனது வேண்டுகோள்" என்றார் மகாதேரர், சாய்ந்தபடியே அமர்ந்துகொண்டு.

"ஆமத்தியர் அவர்களே, அப்படித்தான் இந்த அரசு இருக்கவேண்டும் என்பது உங்கள் விழைவானால், நந்திமித்திரன் போன்றவர்களுக்கு, நீங்கள் மத மாற்றத்தை அனுமதித்திருக்கக் கூடாது என்பதை நான் எடுத்துக்காட்ட வேண்டியதாக இருக்கும்."


"உண்மைதான்! பௌத்தம், நாளுக்கு நாள், தனது புனிதத்தை இழந்துகொண்டிருப்பதற்கு, அதுதான் முக்கியக் காரணம் என்கிற திசையில் இப்போதெல்லாம் சிந்தித்துக்கொண்டே இருக்கிறேன்!..." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மன்னர் குறுக்கிட்டு, "அதுதான் காரணம் என்றால், நந்திமித்திரனை, பௌத்தனாக ஏற்றுக்கொண்டது தவறு என்று கூறுகிறீர்களா என்ன?" என்றார்.

"அதில்லை அரசே! நந்திமித்திரன் போன்றவர்களை என்று கூறுகிறேன்! ஒரு மதத்திலிருந்து, இன்னொரு மதத்திற்கு ஒருவன் தாவி வரும்போது, சரணடைய வருகின்ற மதம், சரணடைகின்றவனுடைய தகுதிகளை, இன்றைக்குச் சோதித்துக் கொண்டிருக்கவில்லை. எந்த ஒரு மதத்துக்குமே அப்படி ஒரு சோதனைக் கட்டம் இருக்குமானால் ஞாலத்தில், எந்தவொரு மதமும் இன்று இழித்துரைக்கப்படவோ, பழித்துரைக்கப்படவோ செய்யாது. சித்தார்த்தர் பிறந்ததால் பிறந்த பௌத்தம், ஒரு தரும அசோகன் பிறவாமற் போயிருந்தால், நாடெங்கும் பரவி இருக்குமோ என்னமோ! என்றாலும் பரவலாக அது பரவுவதினும், சிறு அளவுக்கு இருந்தாலும்கூட, அது தூய்மையுடன் இருக்க வேண்டும் என்ற கொள்கையில் எனக்கு உடன்பாடுண்டு. ஆனால் அரசே, அந்த தூய்மை நிலை கெட, நந்திமித்திரன் போன்றவர்கள் பௌத்தத்துக்குள் நுழைந்து கொண்டு செயல்பட நினைவதும், அதற்கும் சில பௌத்த தேரர்கள் பலியாகக் கூடும் என்ற நிலை இருப்பதும் வருந்தத்தக்கதாக இருக்கிறதே! அதனைத் தடுத்து நிறுத்த எவரால் ஆகும்? என் போன்றவர்களால்கூட முடியாதே!"

"அண்மையில் உங்கள் மகாசபை, கூட இருக்கிறதல்லவா! அதிலே இது குறித்து நீங்களே ஒரு முடிவெடுக்கலாமில்லையா?"

"முடிவெடுப்பது என்பது அத்தனை எளிதான காரியமில்லை அரசே! பௌத்த சபை, இப்போது ஒரு குழப்பமான நிலையில் கூடத் தொடங்குகிறது. கருத்து மோதல்கள் மிகுந்திருக்கக்கூடும் என்பது என் கணிப்பு. இந்த மோதல்களுக்கு ரோகண ரடா கால் கோலி இருக்கிறது. அரசே! ரோகண ரடா தங்களிடமிருந்து நழுவி திரை செலுத்த மறுத்தபோது, தாங்கள் தண்டித்து அடக்கிவிட்டிருந்தால், பொதுவாக பௌத்தத்துக்கு இப்போது இந்த அவல நிலை ஏற்பட்டிருக்காது என்பது என் முடிவு. அப்போது அதைச் செய்ய நீங்கள் மறுத்துவிட்டீர்கள்!"

"ஆமாம்! அது சுதந்திர அறிவிப்புக் கொடுத்தபோது, நான் அதனை அனுமதித்தேன். காரணம், நான் யாரையும் அடிமை கொண்டிருக்க விரும்பவில்லை. அது மட்டுமல்லாமல், இந்த ஈழ நாட்டுக்கு முற்றிலும் உரியவர்கள் தமிழர்களே யானாலும், தமிழகத்தின் வடபாலிலிருந்து இங்கே விஜயன் புகுந்து, அவனுக்குப் பிறகு விஜயனது சந்ததியினர் நாடாளத் தொடங்கிய பிறகு, தமிழர் நாடு இது என்ற உணர்வு மங்கி, நாகர் நாடு என்றோ, சிங்க இனத்தவரது நாடு என்றோ உணர்வு மேலோங்கி விட்டது. அசோகனது குமாரன் மகேந்திரனது அரிய முயற்சியால் சிங்களவர்கள் என்போர் பௌத்தர்களே என்றாகி விட்ட பின்பு, சிங்கள உணர்வும்,



பௌத்த உணர்வும் சமநிலையில் இருக்கத் தொடங்கி விட்டது என்பதை அனுபவ வாயிலாக அறிந்து கொண்டேன். அந்தச் சூழ்நிலையில், சிங்களவர்கள் தமது உரிமையை மீட்டுக் கொள்வதற்கு நான் தடையாக இருக்கத் தேவையில்லையே! அதனுலேயே அன்று நான் அதனை மனப்பூர்வமாக அனுமதித்தேன்! ஆசிச் செய்திகூட அனுப்பினேன்!"

"அந்தப் பெரிய இதயம், இன்றைக்கு ரோகணுவுக்கு இல்லையே! அனுராதபுரத்தின் எல்லை, ரோகணுவுக்குச் சொந்தமுடையதாக இருக்கவேண்டும் என்ற அரிப்பல்லவா இன்றைக்கு அதிகமாக இருக்கிறது"

"இருக்கட்டுமே! கேட்டால் கொடுத்துவிடுவோம்!"

"அப்படியானுல், நீங்கள் இலங்கைமீது போர் தொடுத்திருக்கத் தேவையில்லையே! இலங்கையின் அரசுரிமைக் குழப்பத்தை நீக்கி, பசி, பஞ்சத்தைப் போக்க அரும்பாடு பட்டிருக்கத் தேவையில்லையே!"

"தமிழன், மற்றவர்களுக்கு என்றுமே சுமையாக இருந்ததில்லை! ஆனுல் மற்றவர்களது சுமையினைச் சுமந்து கொண்டிருந்திருக்கிறுன்! அன்று சுமந்து கொண்டேன்; இப்போது வேண்டாமென்றுல் சுமையை இறக்கிவைத்து விடுகிறேன்!"

"மற்றவர்கள் இதனைப் பெருந்தன்மையாகக் கருதமாட்டார்கள்! கோழைத்தனம் என்றும், எதிரியை செரு முனையில் செற்றறுக்கும் ஆண்மையின்மை என்றும்தான் கூறுவார்கள்!"

"ஆமத்தியர் அவர்களே! மற்றவர்களுக்காக என்று நாம் நமது வாழ்க்கை முறையினை மாற்றிக் கொள்ள முடியுமா?"

"நீங்கள் இலங்கை நாட்டின் பேரரசர் என்பதை மறந்துவிட்டா பேசுகிறீர்கள் அரசே! மற்றவர்களது மனதறிந்து, நல்லவை தீயவை ஓர்ந்து முடிவெடுப்பது அல்லவா ஒரு மன்னரின் தலையாய கடமை!"

—என்று கூறியதும், மன்னர் கடகடவென வாய்விட்டுச் சிரித்துவிட்டார்! சில விஞடிகளுக்குப் பிறகு "நான் யார் என்பதையும், என் கடமைகள் என்ன என்பதையும், இன்னெருவர் நினைவுறுத்த வேண்டிய நிலைக்கு நான் வந்துவிடவில்லை மகாதேரர் அவர்களே! என்பாலும், இந்த ஆட்சியின் பாலும் நீங்கள் கொண்டிருக்கிற மிகுதியான அன்புக்கு நான் காலம் முழுவதும் கடமைப்பட்டிருக்கிறேன்; நன்றி செலுத்துகிறேன். என் கடமைகளை நான் தெளிவாக வரையறுத்துக் கொண்டிருக்கிறேன்! அதற்குத் தங்களைப் போன்றவர்களது நல்லாசி எனக்குத் துணை நிற்குமென்ற நம்பிக்கையுண்டு. மகாதேரர் அவர்களே! உங்களையே நான் சோதித்துப் பார்க்க முனைந்ததற்கு என்னை மன்னித்துவிடுங்கள்! உங்கள் கருத்துக்கு முரண்பட்டு நான் பேசியபோது, உங்கள் இதயத்தின் ஆழத்தில் இருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது! நான் என் வீரத்திலும், விவேகத்திலும் குறைவுபட்டு விட்டதாக இதுவரையில் எண்ணவில்லை. ஆனுல், போர் என்று ஒன்று ஏற்பட்டால், அதில் கலந்துகொள்ளும் இருதரப்பு மக்களது உயிரும் வீணுகப் பறிக்கப்படக் கூடாது என்பதைப் பற்றி அதிகமாக யோசிக்கிறேன்! உயிர்களுடன் விளையாடுவது என்பது கல்நெஞ்சக்காரர்களுக்கு உவப்பாயிருக்கலாம்! அதனை என் போன்றவர்கள் கைக்கொள்ள நேருவதென்றுல், பெரும்பாவம் செய்திருக்க வேண்டும்! ஆமத்தியர் அவர்களே! உங்கள் மகாசபைக் கூட்டத்தின்போது, சைவ சமயத்தினனை என்னைப் பற்றியும், என் ஆட்சி முறை பற்றியும் பிரச்னையாக்க முயலுங்கள். முடிவை எனக்குத் தெரிவியுங்கள்! நந்திமித்திரனை இன்னமும் நான் சிறுவனுகத்தான் மதிக்கிறேன்! அவனுல் வருகின்ற தொல்லைகள், தடுக்க முடிந்தவையே என்றும் நம்புகிறேன். நீங்கள் கவலைப்படத் தேவை இருக்காது" என்று ஒரே மூச்சாகப் பேசிவிட்டு, இருக்கையை விட்டு எழுந்து, பணியாளை அழைக்கும் மணியை அடித்துவிட்டு வந்து அமர்ந்தார்.

ஆமத்தியர், அரசரது பேச்சு பற்றிய கருத்தோட்டத்தில் மூழ்கினுர். சற்றுநேரத்துக்கெல்லாம் சேவகன் ஒருவன் வந்து வணங்கி நின்றதும், அவனிடம், இரு சிரகங்களில் எலுமிச்சஞ் சாறு கலந்த சுவைநீர் கொண்டு வரச் சொல்லி அனுப்பினுர்.

பணியாள் மீண்டும் சென்றதும் "என்ன தேரர் அவர்களே, சிந்தனையி லாழ்ந்து விட்டீர்கள்?" என்று கேட்டுவிட்டு "நான் தங்களது உள்ளத்தைப் புண்படுத்தி விட்டேனு?" என்றுர்.

"அதெல்லாமில்லை அரசே! ரோகணுவுடன் ஒரு போர் ஏற்படக்கூடாது என்பதில் நீங்கள் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறீர்கள். ஆனுல் ரோகண அரசி விகாரதேவி போர் ஆயத்தங்களில் ஈடுபடத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறுள்! ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மனம் வேதனையடைகிறது. நான் ஒரு துறவிதான்! அரசுக் காரியங்கள்பற்றி நான் அக்கறை கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லைதான்! ஆனுல், சைவமதத்தைச் சார்ந்த தங்களால், பௌத்தத்துக்கு எந்த வகையிலாவது இழுக்குண்டாகவே இல்லையே என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன்! சைவ மதத்தை. ஙங்கே பரபபுவதற்குக்கூட நீங்கள் முயன்றதில்லை என்பதையும் அறிகிறேன்! என் கண்களில் நீங்கள் உயர்ந்து காணப்படுகிறீர்கள்! பௌத்த மதம் என்றும், தேரர்களது ஆதரவுக்கு உரியவர்கள் என்றும் பேசிக்கொண்டிருக்கிற ரோகணு, மிகமிகக் கீழே கிடப்பதையும் எண்ணிப் பார்க்காமலிருக்க முடியவில்லை. இங்கே நான் குழம்பிப் போகிறேன்!"

"போர் என்று ஏற்பட்டால், பௌத்த தேரர்கள் நிச்சயம் ரோகணுவின் பக்கம்தான் இருக்கமுடியும்! என்பதுதானே உங்கள் விளக்கத்தின் சாரம்?" என்று கேட்டுவிட்டு ஒருகணம், மீண்டும் தொடக்கத்தில் விளக்கியதுபோல கண்களை மூடிக்கொண்டு சிந்தித்தார்! அடுத்த விஞடியே, "மகாதேரர் அவர்களே, போர் ஒன்று ஏற்படுவதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாமற் போய்விடுமானுல், அந்தச் சூழ்நிலையில்கூட, நடைபெறும் போர் தர்மத்துக்கும், நியாயத்துக்கும் மாறுபட்டதாக இராது என்பதற்கு என்னுல் உத்திரவாதம் தரமுடியும். ஆனுல் நீங்கள் உங்கள் மகாசபைக் கூட்டத்தில், இந்தப் பிரச்னையை எழுப்ப முயலவேண்டும்" என்று கூறிக்கொண்டிருக்கும்போது, வேறுேர் பணியாள் பொன் தட்டு ஒன்றில், இரு பொற்சிரகங்களில் சுவை நீர் நிரப்பிக் கொண்டுவந்து, மன்னருக்கும், மகாதேரருக்கும் கொடுத்துவிட்டுச் சென்றுன். இருவரும் அதனைப் பருகினர். பருகிவிட்டு, எள்ளாளச் சோழர், "ஆமத்தியர் அவர்களே! நீங்கள் இது தொடர்பாக ரோகணுவுடன் தொடர்பு கொண்டீர்களா?" என்று கேட்டார்!

"இல்லை, நாஞக எந்த முயற்சியும் மேற்கொள்ள

வில்லே. ஆனால் சில நாட்களுக்கு முன்பு, ரோகண இளவரசன் கமணன், என்னைச் சந்திக்க வேண்டும் என்று அனுமதி கேட்டிருந்தான்! மறுத்துவிட்டேன்" என்று கூறினர் அமைதியாக! "ஏன்?" என்ற வினவை, மன்னரது விழிகள் தேக்கி நிறுத்தின. "ரோகண அரசுக் குடும்பத்தின்மீது நான் எந்தக் காலத்திலும் பண்பாட்டு ரீதியான அனுதாபம் கொண்டிருக்கவில்லே. அதனுல்தான்......" என்று சொல்லி நிறுத்தினர். "இனிமேலும் சந்திக்கமாட்டீர்களா?" என்ற மன்னரது வினவுக்கு விடையாக, "சொல்ல முடியாது. பல திசைகளிலிருந்தும் என்னை நிர்ப்பந்தங்கள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. மகா சபைக் கூட்டத்திற்குப் பிறகுதான் எந்த ஒன்றைப் பற்றியும் நிச்சயமாகக் கூறமுடியும்" என்ருர்.

"ஆமத்தியர் அவர்களே! சிலகாலமாகவே, நான் தங்களைச் சந்திக்க வேண்டும் என்று என்னுள் எண்ணி வந்திருக்கிறேன். எதிர்பாராமல் இன்றைக்கு அந்த வாய்ப்பளித்தீர்கள். தாங்கள் அடிக்கடி இங்கு வந்துபோக வேண்டுகிறேன்! தங்கள் வருகை எனக்கு மன அமைதி கொடுப்பதாக இருக்கும்." என்ருர் சோழமன்னர்.

"முடியுமானுல், நான் இந்த அரண்மனையிலேயே தங்கிவிடத்தான் விரும்புகிறேன்; சுமத்தப்பட்டிருக்கும் பொறுப்புக்கள் அதனைத் தடுத்து விடுகின்றன"- என்று கூறிக்கொண்டே எழுந்தார். எழுந்து கொண்டே, "தேவியார் அவர்களைச் சந்தித்துப் பல்லாண்டுகளாகிவிட்டன. இன்றைக்குக் கூட அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லே" என்ருர்.

'தேவிகூட தங்களைப்பற்றி அடிக்கடி கேட்டுக் கொண்டுதானிருக்கிருள். தங்களைச் சந்தித்து நல்லாசி பெற, எல்லாருக்கும், எல்லா நேரத்திலும் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லையே" என்று கூறி சிரித்துக்கொண்டார் மன்னர்.

மகாதேரரும் பதிலுக்குச் சிரித்துவிட்டு "நான் விடை பெறுகிறேன் அரசே!' என்று கூறி கரங்கூப்பித் தொழுதார். மன்னரும் பதிலுக்குத் தொழுது சில அடிகள் வரையில், ஆமத்தியரைப் பின் தொடர்ந்து சென்று வழியனுப்பிவிட்டுத் திரும்பி, அந்தப்புறம் போகப் புறப்பட்டார். அந்தத் திசையிலிருந்து அரசி சோழதேவியார் வந்துகொண்டிருந்தார், பரபரப்போடு. இன்னொரு பக்கமிருந்து வந்த பணியாள் ஒருவன், "தங்கள்வருகைக்காக, அந்தரங்க ஆலோசனை அவையில், தளபதியாரும், மருத்துவரும் காத்துக் கொண்டிருக்கிருர்கள்" என்று வணங்கி நின்று தெரிவித்தான்.

அதற்குள் சோழதேவியும், அரசரை அணுகினர். "காலங் கடந்து வந்திருக்கிருய் தேவி! ஆமத்திய மகா தேரர் வந்திருந்தார்! உன் நலம் பற்றி மிகவும் கேட்டார்!" என்ருர். "எவ்வளவு பெரிய பாவி நான்! அவரைப் பார்க்கக்கூட இயலாதவளாகி விட்டேனே!" என்று கூறினர் சோழதேவி. ஏமாற்றம் அவரது முகத்தில் தெளிவாகத் தெரிந்தது. "நாம் மறுபடியும், வெகு விரைவில் அவரைச் சந்திக்க வேண்டியிருக்கலாம் தேவி!" என்று கூறிவிட்டு, தளபதியாரைக் காண, தேவியுடன், அந்தரங்க ஆலோசனை அறையின் பக்கம் திரும்பி நடக்கத் தொடங்கினர்.




# சுவைத்ததைச் சொல்கிறோம்

"சந்திரோதயன்" எழுதிய "ஒரு பவுன் மோதிரத்" திற்கு—ஒரு பவுன் மோதிரம் கொடுத்திடலாம், 11-7-71 இதழில் கவிதைகள் ஏதும் இடம் பெருமை குறித்து என் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு இதழிலும் கவிதைக்கு இடமளிக்கத்தவறவேண்டா!

இராம. மறைமுதல்வன்,—வடமாதிமங்கலம்.

4—7—71 இதழில் வெளிவந்துள்ள "ஆச்சாரியாரின் புதியஅவதாரம் மடல்நல்லசவுக்கடி, இதைப்போல் மடல்களை தொடர்ந்து எழுதச் சொல்லுங்கள். தொடரட்டும் உங்கள் பணி.

இரா. கண்ணதாசன்,—சாத்தியம்.

18—7—71. 'காஞ்சி' இதழில், புலவர் அரிமதி தென்னகன் அவர்கள் எழுதிய "இங்கென்ன வாழ்கிறதோ"! என்ற இலக்கியக் கட்டுரையைப் படித்துப் பார்த்தேன்.

சுருக்கமான தமிழில் (மனம்) உருக்கமான மொழிகளால், தலைவன், தலைவி இவர்களின் காதல் உள்ளக் கிடக்கையை எடுத்துப் பேசும் மடல் நெஞ்சில் இனிக்கின்றது. அதைப் படிக்குந்தோறும் என் இதயத்தையும் இழுக்கின்றது,

இது போன்ற கட்டுரைகள் மேலும் தொடர்ந்தால் நலமெனக் கருதுகின்றேன்.

அ. சண்முகம்,—களம்பூர்.

"இன்றையதினம் நடக்கும் இயக்க இதழ்களிலே நல்ல தரமான பகுத்தறிவுக் கருத்துக்களை, வழங்கும், காஞ்சி, இன்னும் முழுக்க முழுக்க பகுத்தறிவுக் கருத்துக்களை தாங்கி வரவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். சென்ற இதழில் பேரறிஞர் அண்ணு அவர்களின் "விதைக்காது விளையும் கழனி" என்ற கட்டுரை இன்றைய பார்ப்பனதாசர்களும் பழமை விரும்பிகளும் படித்து பயன் பெற வேண்டிய பயனுள்ள கட்டுரை. இந்த வார இதழில், புலவர் அரிமதி தென்னகன் அவர்களின் சுத்தானந்த பாரதியார் பதில் சொல்வாரா என்ற சிறப்புக் கட்டுரை பார்ப்பன அடிவருடி பாதந்தாங்கி தமிழர்களுக்கு அவர்கள் புகழ்பாடும் திருக்கூட்டங்களுக்கு நல்ல உவமை நயத்துடன் உணர்ச்சி பொங்க சூடு கொடுத்துள்ளார். இப்படிப்பட்ட நல்ல சுயமரியாதை கட்டுரைகள் வாரந்தோறும் தவருமல் இடம்பெற வேண்டுகிறேன்.

வ. தாயுமானவன், புதுவை-8.

கவிபலத்தால் பாவேந்தர் தமின்
புகழ்மறைக்க நினைத்திட்ட புல்லர்
"கவியோகி" குற்றம் கடிந்துரைத்து
கனித்தமிழர் விழிப்படையச் செய்த
"புதுவை மலர்" அரிமதி'நீர் வாழ்க!
பொங்கிவரும் வெள்ளமெனக் கேள்வி
பதிலுரைக்க வேண்டும்! கவியோகி!
அதில்பணிய வேண்டும் மனமாறி!

பாலக்கோடு கவிதா

★

★★★★★★★★★★★★★★

இக் கட்டுரையில் காணப்படும் விமர்சனக் கருத்துக்கள் முழுக்க முழுக்க கட்டுரையாசிரியரையே சாரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

# இராசமன்னார் குழு அறிக்கையும் - - இந்திய மொழிகளும்

இந்தியாவின் அரசியல் அமைப்பு இந்திய நாட்டு அறிஞர்கள் சிலராலும் சொத்துரிமையும்எழுத்தறிவும் மட்டுமே உடைய இந்திய மக்களின் பேராளர்கள் சிலராலுமே உருவாக்கப் பெற்றதாகும். மேலும் இந்திய விடுதலைக்குப் பின்பு இந்திய அரசியலில் எவ்வளவோ கடுமையான மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. மையத்திலும் மாநிலங்களிலும் ஒரே கட்சியின் ஆட்சி என்ற நிலைமாறி வேறு வேறு கட்சிகளின் ஆட்சி ஏற்பட்டுவிட்டது. இந்தச் சூழ் நிலையில் பழைய இந்திய அரசியல் அமைப்பே மாறுதலின்றிப் பயன்படும் என்று எதிர் பார்ப்பது பகற்கனவேயாகும். இவ்வுண்மையை நன்றாக ஓர்ந்து உணர்ந்த நிலையில் மைய மாநில உறவுகளை மாற்றி ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட அறிஞர்கள் குழுவே இராசமன்னார் குழுவாகும். இப்படி ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்ற எண்ணம் முதன் முதல் காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் கருத்திலேதான் அரும்பியது. பின்னர் அந்த அரும்பு மலர்ந்து மணம் வீசியது கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் உள்ளத்தில். ஆனால் பேரறிஞர் உள்ளத்திலேயே அவ்வரும்பு அரும்புதற்குக் காரணமாய் அமைந்த வேர் அருமைத் தலைவர் திரு. ம.பொ.சி. அவர்களின் தமிழரசு இயக்கமே என்பது தெளிவு. (நல்ல வேளையாக குழு அறிக்கையின் முன்னுரை தலைவர் ம.பொ.சி. அவர்களின் பெயரை இறுதியாக வேனும் குறிக்கிறது. இராசமன்னார் குழுவில் முன்னாள் சென்னை உயர் நீதி மன்றத் தலைமை நடுவர் டாக்டர் இராசமன்னார் அவர்கள் தலைவராகவும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களும் சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நடுவர் பி. சந்திரா ரெட்டி அவர்களும் உறுப்பினராகவும் இடம் பெற்றனர். ஏறத்தாழ $1\frac{1}{2}$ ஆண்டுக் கால ஓய்வுக்குப் பின் இக்குழு தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது. ஏறத்தாழ 227–55 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையில் ஏழே பக்கங்கள் தான் மொழிச் சிக்கல் பற்றிய ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்தே எவ்வளவு பெரிய சிக்கலுக்கு எவ்வளவு சிறிய இடம் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரியும்.

---

டாக்டர் ந. சஞ்சீவி

---

எனினும் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்பொழுது - மைய-மாநில உறவுகள்பற்றிப் புதிய சிந்தனைகளைத் தூண்டுவிக்கும் வலிமை வாய்ந்தது இராசமன்னார் குழு அறிக்கை எனலாம். இந்த அளவுக்காயினும் கருத்துகளைத் துணிந்து சொல்லத்தக்க அறிஞர் குழு ஒன்றை நியமித்தது குறித்துத் தி. மு. க. அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும். எடுத்த எடுப்பிலேயே எல்லாம் நடந்து விடுவதில்லை, அதுவும் பண நாயக ஜனநாயகத்தில் தனியுடைமை மக்களாட்சியில்;

இந்நிலையில் இராசமன்னார் குழு அறிக்கை இந்திய மொழிகளின் ஆக்கம் கருதி கூறும் கருத்துக்களை ஆய்வதே இப்போதைக்கு நமக்குள்ள இன்றியமையாக் கடமை. ஏழு பக்கங்களைக் கொண்ட மொழ் பற்றிய 13ஆம் பகுதியின் முடிவாக இராசமன்னார் குழு செய்துள்ள பரிவுரைகள் ஐந்தேயாகும். அவை; 1. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆங்கிலம் அல்லது எட்டாவது பட்டியலில் உள்ள எந்த இந்திய மொழியிலும் நாடாளுமன்றக் கூட்டங்களில் பேசலாம், 2. மையத்திற்கும் மாநிலத்திற்கும் மாநிலங்களுக்கு இடையேயும் ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்கவேண்டும், 3. மைய உயர் நீதி மன்றத்திலும் மாநில உயர் நீதி மன்றங்களிலும் ஆங்கிலமே தொடர்ந்து நீதி மன்ற மொழியாக நிலைக்க வேண்டும். 4, (அ) மாநிலங்களிலுள்ள மைய அரசு அலுவலகங்கள் அந்தந்த மாநில மொழிகவிலேயே மக்களோடு தொடர்பு கொள்ள வேண்டும். (ஆ) மைய அரசு அலுவலகங்கள் மாநில அரசுகளிடமும் அதன் அலுவலகங்களிடமும் மாநில மொழியிலேயே கடிதப் போக்குவரத்துச் செய்யவேண்டும். 5, மாநிலங்களில் பணியாற்றும் மைய அரசு அலுவலர்கள் மாநிலத்து ஆட்சி மொழியில் தேர்ந்த பயிற்சி உடையவராய்த் திகழ்தல் வேண்டும்.

இந்த ஐந்து பரிவுரைகளும் கண்ணெனப் போற்றத் தக்கன என்பதில் கடுகளவும் ஐயமில்லை. ஆனால், இவைகள் இந்திய மொழிகளின் வருங்கால வளத்திற்கும் வாழ்விற்கும் போதுமானவையா என்பதே முதற் கேள்வி. இவ்வினாவிற்கு உரிய விடையைத் தேடும் வகையில் நம் கருத்தையே வினவும் தலைமைக் கேள்விகள் இரண்டு. அவை: இராசமன்னர் குழுவையே 1. மைய அரசின் ஆட்சி மொழிச் சிக்கல் ஏன் மருட்டவில்லை? 2. இந்தி ஆட்சி மொழியாக மைய அரசு செய்யும் செலவுகளும் அதிகாரங்களும் ஏன் அச்சுறுத்தவில்லை என்பனவே ஆகும். மையத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே ஆங்கிலம் ஒன்றே தொடர்பு மொழியாக இருக்க வேண்டுமென்று பரிவுரை செய்கிறது இராசமன்னர் குழு. ஆம். மையத்திற்கும் இந்தியே ஆட்சி மொழியாக இருக்கும் மாநிலங்களுக்கும் இடையேயும் கூட ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்க வேண்டுமென்று பரிவுரை செய்கிறது அக்குழு. அப்படியானால் மைய அரசும் ஆங்கிலம் ஒன்றையே ஆட்சி மொழியாகக் கொள்ள வேண்டும் என்று பரிவுரை செய்வதில் என்ன தவறு? நாட்டின் நேரமும் பொருளும் மிச்சமாகும் அன்றோ? குறுகிய மனப்பான்மையிலிருந்து விடுதலை பெற முடியாத நிலையில் தேவையானால் வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு சடங்குச் செயல்களுக்கு மட்டும் இந்தியைப் பயன்படுத்தலாம் அன்றோ? பகுத்தறிவும் பரந்த மனப்பான்மையும் இருந்தால் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தியக் குடியரசுத் தலைவரை நேரில் வைத்தே தெளிந்து துணிந்து சொல்லியது போல் உயிருள்ள இந்திய மொழிகளுள் பண்பும் பழமையும் நிறைந்த பைந்தமிழையே அத்தகைய செயல்களுக்கும் பயன்படுத்தலாம் அன்றோ? இது பற்றி இராசமன்னர் குழு தெளிந்து துணிந்து அறிவுரையும் பரிவுரையும் வழங்காதது தமிழர்கள் தவக்குறையே ஆகும்.

இரண்டாவதாக மாநிலங்கள் அவ்வவற்றிற்குரிய ஆட்சிமொழியிலேயே ஆட்சி செய்ய வேண்டுமென்பதில் நல்ல வேளையாகக் கருத்து வேறுபாடு கொள்ளாத இராசமன்னர் குழு அத்திட்டத்தின் அடிப்படைத் தேவையான பயிற்சி மொழிச் சிக்கலைப் பற்றி ஒன்றுமே புகலாதது புரிந்துகொள்ளத் தக்கது; ஆனால் போற்றத் தக்கது இல்லை. பல்கலைக்கழக நிலைவரையில் பயிற்சிமொழி இன்னதாக இருக்கவேண்டு மென்பதை அறுதியிட்டு உறுதிசெய்ய வேண்டிய பொறுப்பு மாநில அரசுகளின் தனிப் பொறுப்பு என்று கருதி இராசமன்னர் குழு பேசாநோன்பு பூண்டு இருக்கலாம் என்று அறியாதவர் ஐயுறலாம். ஆனால் எண்ணிப் பார்க்கும்போது கல்வி மாநிலங்களுக்கு மட்டுமே உரிய பொருளாக இல்லாமல் மைய அரசுக்கும் உரிய பொருளாக இருப்பதால் நேரும் கொடுமைகளை நினைத்துப் பார்த்தால் நேரும் இவ் வையம் உடனே அகலும். முதலாவதாக ஒரு மாநிலத்தில் தாய்மொழி மட்டுமே பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்று விதி செய்தால் அந்த விதியை அடிப்படை உரிமைகளின் பெயரால் மைய உயர்நீதி மன்றம் தகர்ப்பதைக்காண்கிறோம். தாய்நாட்டுப் பற்றையும்—கற்பையும் ஒத்துக் கொள்வோர் தாய்மொழிப் பற்றையும் கற்பையும் ஒத்துக் கொள்வது இல்லை. தாய் நாட்டின் நலனுக்கு மாறாக அயல் நாட்டிடம் பற்று கொள்வதைக் குற்றமாகக் கருதக்கூடிய நீதி மன்றம் தனி மொழியின் நலனுக்கு மாறாக அயல் மொழியிடம் பற்று காட்டுவதைக் குற்றமாகக் கருதுவதில்லை. மொழியையும் கலையையும் காக்கவுமே நாடு என்ற பாகுபாடு என்பது இன்னும் நம் பெரியோர்க்குத் தெரியவில்லை. எனவே, தாய்மொழி வழிக் கல்வியை அமைக்க வேண்டியது அரசியல் அமைப்பு வழி பெருங்கடமை என்பது இன்னும் பெருமக்கள் பலரால் ஒப்புக் கொள்ளப்பட்ட மொழி வழி மாநிலங்களின் ஒரு உணரப்படாமல் உள்ளது. கல்வி மொழி தாய்மொழியாக இல்லையென்றால் ஏடாளும் மொழி நாடாளும் மொழியாவது எங்ஙனம்? இதை இராசமன்னர் குழு உணரும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால் அதற்காக அந்தக் கொள்கையின் இன்றியமையாமை நாம் வற்புறுத்தாமல் இருப்பதற்குமில்லை. அதை வற்புறுத்துவது இராசமன்னர் குழுவின் பரிவுரைகளை நடைமுறைப் படுத்துவதற்குரிய நல்வழியே ஆகும்.

இவ்வகையில் இராசமன்னர் குழு செய்திருக்கவேண்டிய சிறந்த பரிவுரை கல்வி மொழி பற்றிய சிக்கலில் தலையிடுவதற்கு மைய நீதி மன்றத்திற்கு உரிமை தரக் கூடாது என்பதேயாகும். வேறு பல வகைகளிலும் மைய நீதி மன்றத்தின் உரிமைகளையும் கடமைகளையும் மட்டுப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் பரிவுரைகள் செய்யும் இராசமன்னர் குழு அதைச் செய்திருந்தால் யாரும் குறை கூறி இருக்க முடியாது. இரண்டாவதாக மைய அரசு நாடெங்கும் இந்தி வழி கல்வி கற்பிக்கும் முயற்சிக்கு ஏராளமான பணம் செலவிடுகின்ற நிலையைக் காண்கிறோம். இத்தகைய முயற்சியும் அந்தந்த மாநில அரசுகளின் ஒப்புதல் இல்லாமல் நடைபெறக்கூடாது என்றும் இராசமன்னர் குழு பரிவுரை செய்திருக்க வேண்டும். இதற்கேற்றவாறு அரசியல் அமைப்பில் செய்யவேண்டிய மாறுதல்களையும் செய்ய அது அறிவுரை வழங்கி இருக்க வேண்டும். மூன்றாவதாக ஆங்காங்கே மாநிலங்களுக்குள் புகுந்து மையஅரசு நடத்தும்பள்ளிகளும் தேவை இல்லையென்று குழு பரிவுரை செய்திருக்க வேண்டும்.

இனி, மாநில உயர்நீதி மன்றங்களின் மொழி ஆங்கிலமாகவே இருக்க வேண்டுமென்று இராசமன்னர் குழு செய்திருக்கும் பரிவுரை ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று. அதுவும் மாநில உயர்நீதி மன்றங்களின் ஆட்சி உரிமைகளை அகலப்படுத்தி மைய உயர்நீதி மன்றத்தின் ஆட்சி உரிமைகளைக் குறுக்கிப் பரிந்துரைகள் பகர்ந்திருக்கும் இராசமன்னர் குழு முறை மன்ற மொழி பற்றிச் செய்திருக்கும் பரிவுரை பழுதுடையதே யாகும். இந்திய அரசியல் சட்டத்தை ஒட்டிய சிக்கல்களை மட்டுமே மைய உயர்நீதி மன்றம் மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று பரிவுரை பகரும் நிலையில் உயர்நீதி மன்றங்களின் மிக பெரும்பாலான தீர்ப்புகள் தமிழிலேயே இருப்பதால் எவ்விதத் தீங்கும் நேராது. இந்திய அரசியல் சட்டத்தை ஒட்டிய சிக்கல்கள் பற்றிய தீர்ப்புகளும் கூட உயர்நீதி மன்றங்களில் அந்தந்த மாநில மொழிகளிலேயே வழங்கப் படலாம். அவற்றை மைய உயர்நீதி மன்றம் மறு ஆய்வு செய்ய நேரிடும்போது மட்டும் தேவையான தீர்ப்புகளின் ஆங்கில ஆக்கங்களை மைய உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பிவைக்கலாம். இதனால் நேரக் கூடிய ஏதம் ஏதும் இல்லை. மாநில அரசுகளுக்கு ஒரு மொழி, மாநில உயர்நீதி மன்றங்களுக்கு வேறு மொழி என்பது எந்த நீதியுள் அடங்கும்?

(15-ம் பக்கம் பார்க்க)

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் பறிக்கும் தந்திரம், என்ற புதிய கருத்தை ஏற்றுக்கொண்டால், பழைய கருத்தை நம்பி மக்கள் தரும் பணம் கிடைப்பது நின்றுவிடும், ஆகவே நஷ்டம். எனவே, தமக்கு நஷ்டம் தரக்கூடிய புதுக் கருத்துகளை அப்பூசுரக் கூட்டம், எங்ஙனம் வரவேற்கும்? எதிர்க்கத்தானே செய்யும், ஆயிரம் தத்துவத்தைவிட அரை ரூபாய் தட்சணை மேல் என்று எண்ணும் கூட்டமல்லவா அது. எங்ஙனம் அந்தக் கூட்டம் சுய நலத்தை இழக்கத் துணியும். அதற்குப் பிரத்யேகமான நற்குணம் வேண்டுமே, எங்ஙனம் அதனைச் சுயநலத்தையும் சுகபோகத்தையும் பாரம்பரியமாக ஆண்டு அனுபவித்துக் கொண்டு வரும் கூட்டம் பெற முடியும்? இதனை உணராத சிலர், வேறு எத்தனையோ கருத்துகள், நாளாவட்டத்திலே நசித்துப் போனது போலவே, பொது அறிவு பரவினதால், அவை புதையுண்டதுபோல, மிச்சமிருக்கும் நச்சு நினைப்பும் பிச்சுப் பிள்ளை விளையாட்டும் தாமாகவே ஒழிந்துபோகும் என்று நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையிலே வடலூராரும், "கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக" என்று கூறினார், கூறினதைக் கீதமாக்கிக் கொண்டனரே யொழியக், கண்மூடி வழக்கத்தை யார் வெட்டிப் புதைக்க முன் வந்தனர். அருட்பாவைப் பூசத்துக்கேற்ற பாசுரமாக்கினரேயொழிய பூசுரப் புரட்டு ஒழிப்புக்கான மார்க்க மாகக் கொண்டவர்கள் யார்? எனவேதான், ஒரு கூட்டத்துக்கு அது பார்ப்பனக் கூட்டமாக இருப்பதால் என்று மட்டுமல்ல, எந்தக் கூட்டமாக இருப்பினும் சரியே, ஒரு கூட்டத்தின் சுய நலத்தை வளர்க்கும் எண்ணங்களைச் சுலபத்திலே மடியவிட மாட்டார்கள். இங்கு மட்டுமல்ல, எங்கும்! அந்த எண்ணங்களைத் துணிவுடன் தாக்கித் தகர்த்தாலொழிய அவை மாளா. அவை மாள ஒட்டாது தடுக்க, சகல சாதனங்களையும் உபயோகிக்க, சுயநலக் கூட்டம் ஒரு துளியும் தயங்காது. அந்தச் சாதனங்களிலே மிக முக்கியமானது, புராணப் பிரசாரம்! இதனை, நமது நண்பர்கள், இலக்கியச் சுவைக்காக என்றோ, கல்வெட்டு, வரலாறு என்றோ, கல்வெட்டு, வரலாறு என்றோ எண்ணிக்கொண்டு, செய்பவர்களாகக்கூட இருப்பர். கதை கிடக்கட்டும், இதிலே காணக் கிடைக்கும் வரலாற்றுத் துணுக்குகளின் மூலம் தமிழகத்தைக் காண்கிறோமே என்று பூரிக்கக்கூடும்.

> "பங்கப்பழனத்து உழும்உழவர்
> பலவின் கனியைப் பறித்ததென்று
> சங்கிட்டு எறிய"

என்று செய்யுளைப் பாடி, "என்னே! இந்நாட்டு வளம்! உழவர் உழுகின்றனர்! உழவுதானே உயிர்கட்கு ஆதாரம்! ஆதலானன்றோ தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்றார். அத்தகைய உழவு! ஆங்கு மரங்களிலே மந்திக்கூட்டம்! அவை பலாவினைப் பறித்தன. பார்த்த உழவர், மந்தியை விரட்டுகின்றனர். யாங்ஙனம்? கல் கொண்டோ? இல்லை! கல் ஏது? கட்டாந்தரையோ அது! அல்ல! வயல்! எனவே உழவர், அங்கு கிடந்தது கொண்டு, மந்தியினை விரட்டலாயினர். என்ன கிடைத்தது? இங்கேதான் மெய்யன்பர்கள், நந்தமிழ் நாட்டின், தவம் நிறைந்த தமிழகத்தில், செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே என்று இந்நாள் புலவர் இறும்பூதெய்திப் பாடியபடி பண்பு நிறைந்த தமிழகத்திலே, எத்தகைய வளம் இருந்தது என்பதனைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். வயலிலே சங்குகள் கிடைத்தன! வளமான நாடு! இதற்கு உண்டோ ஈடு? சங்குகள்! உழவர் கண்டது சங்குகளை! வாரினார்! வீசினார்!! என்று செய்யுளைப் பிழிந்து பிழிந்து செந்தமிழ்ச்சுவையைச் சொட்டச் செய்து, புராணமேயாயினும், புதுமைக்கு ஒவ்வாது எனினும், புதைந்துள்ள பொன்னைக் காணீர், கலைக் கருவூலத்தைப் பாரீர்," என்று கூறப் புராணங்களைப் பயன் படுத்திக் கொள்பவர்களாகச் சிலர் இருக்கக் கூடும். எக்கருத்துக்காக எம்முறையிலே இவர்கள் அந்தப் புராணங்களைப்பற்றிப் பேசினும் சரியே, பொதுவாக அம்முறை, புராணப் பிரசாரம் நடைபெறுவதாகவே முடியும். விளைவும், இவர்களின் நெஞ்சை அள்ளும் கலை பரவுவதாகவோ, வரலாறு பரவுவதாகவோ இராது. விளைவு, கற்பூரக் கடையின் கணக்கும், கனபாடியின் தொந்தியும் பெருத்துவிடுவதாகத்தான் இருக்கும். புராணப் பிரசாரத்தின் பலனைப் பூசுரக்கூட்டம் இனிமையாக அனுபவிக்கும், இதனை, அந்தக் கூட்டத்துக்குக், கூலியுமின்றிச் செய்த "குரலோர்" புலவர், படிப்பாளி, சூனுமானுவின் வைரி, அவர் நாவிலே சரஸ்வதியே தாண்டவமாடுகிகிறாள், சகலகலா வல்லவர், என்ற ஓசைப்பட்டங்களைப் பெற்றதன்றி வேறு உருவான பலனையும் பெறுவதில்லை. இதனை அவர்கள் உணருவதில்லை. உணர்ந்தோர் உரைத்தாலோ, சீறுமலும் இருப்பதில்லை! சிவநேயர்களின் சீற்றம் சிரிப்புக்கிடமானதே!! இங்கே சீறுகின்றனர் இச் செல்வர்கள். ஆனால் செல் புகுந்த ஏடுகளைச் செந்தமிழ் கலந்து நாட்டினருக்குத் தரும் இவர்தம் "சேவையால்" பட்டமரம் துளிர்த்ததுபோல, பாழ்பட இருந்த தமது சுகபோக வாழ்வு, மீண்டும் வளமாகிறது என்பதை உணர்ந்து, அந்தச் சிறு கூட்டம், சிரிக்கிறது!! பாவையர் 'படப்பிடிப்பும்' கலைச் சுவையும், வரலாற்றுத் துறையும், உள்ளன என்று புராணங்களைப் போற்றிப் புகழ்பவர்கள், ஆரியத்தின் ஏஜண்டுகள் — கமிஷனும் கிடையாது!! காமக்கூத்து நடைபெறும் இடத்திலே கற்பூரக் கடை வைப்பது கடவுள் நெறியைக் கயவரும் உணரச் செய்யும் புண்ய கைங்கரியமாகும் என்று கருதிச் செய்பவர் உண்டோ? செய்தால் பயன் என்ன காணமுடியும்! அதுபோல, காமக்கிருமிகள் நெளியும் பல பாடல்களுக்கு இடைஇடையே கடவுள் சொரூபத்தைக் காட்டுகிறோம் பாரீர், என்று புராணம் படிப்பதும், பயனற்ற முறையாகும். புராணப் பிரசாரத்தின் விளைவாக, சன்மார்க்கம் பரவமுடியாதபடி போகிறது என்பதுமட்டுமல்ல, கலைக்காக, வரலாற்றுக்காக, என்று எதைக் கூறி அந்தக் காரியத்தைச் செய்தாலும் சரியே, அச்செயல், பூசுர அரசு அமைக்க, புலவர் முரசு கொட்டுகிறார் என்றே பொருள். இந்தக் காரியத்துக்கா தமிழ் அறிவு பயன்படுத்தப்பட வேண்டும்! பெற்ற மகனைப் பெருநிதி படைத்தோனாகக் காணமுடியாவிட்டாலும், பிறன்மனை நுழையாதபடியாவது தடுக்கக்கூடாதா—தடுத்தல் வேண்டாமா? கற்ற தமிழின் துணைகொண்டு, சமுதாயத்திலே கப்பிக் கொண்டுள்ள காரிருளை நீக்கும் கடமையைச் செய்யத்தான் தவறிவிட்டார்களே அத் தமிழை ஆரிய உமிழ்நீரிலே ஆழ்த்தும், அக்ரமத்தையாவது செய்யாதிருக்கக்கூடாதா? ஃ

# காமவேள் நடன சாலையில் கற்பூரக் கடை!

> "பெற்ற மகனைப் பெருநிதியம் படைத்தவனாகக் காண முடியாவிட்டாலும்—பிறன்மனை நுழையாதபடியாவது தடுக்கக்கூடாதா?" என்று கேட்டுத் தாழ்ந்த தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது 17-2-46ல் திராவிடநாடு' இதழில் வெளிவந்த இந்தக் கட்டுரை!"

பூவையரைப் பூரிப்புடன் புகழ்வதிலே புராணம் முதலிடம் பெற்று விளங்குகிறது! சாது சன்யாசிகள் பட்டியலிலே வந்தவர்கள் வேண்டுமானால், தேகத்தின் நிலையாமையைப் பற்றியும், அதன் ஆபாசத்தைப் பற்றியும்,

காகமொடு கழுகலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தி
கால்இரண்டு, நவவாசல்பெற்றுவளர்
காமவேள் நடனசாலை
மோக ஆசைமுறியிட்ட பெட்டி
மும்மல மிகுந்து ஒழுகு கேணி

என்று பாடியிருப்பர். ஆனால் இந்த நிலையல்லாத, ஆபாச மிகுந்த தேகத்தைப்பற்றி, அதிலும் தையலரின் தேகத்தைப்பற்றிப், பாடத் தொடங்கினாலோ, பக்திப் பாசுரக்காரரும், பாராயண நூல்கோர்த்தவரும், பரமன்அருள் பெற்றவரும், அங்கம் ஒவ்வொன்றும் அழகுற அகக்கண்முன் நிறுத்தி, அளவும் தன்மையும் கண்டு, கனிமொழியினால் கூறுவதிலே, நிகர்இல்லா திருப்பதைக் காணலாம். மும் மலக் கேணியை வேறோர் பக்தர் வர்ணித்திடும் வகையைக் காண வேண்டுகிறோம்.

மலரணி கொண்டைச் சொருக்கிலே!
சொலுமொழியின்பச் செருக்கிலே
நிலவொளி அங்கக்குலுக்கிலே
நிறைபரிமள கொங்கைக்குடத்திலே

என்று "குளோசப்" காட்சிகளை, முதல்தரமான சினிமா டைரக்டரும் பொறாமைப்படும் அளவுக்குக் காட்டி விட்டு, "நிமிஷம் இணங்கிய" செய்தியைக் கூறி, அதன் பலனாக அந்நங்கை, 'சொப்பனத்திலே' வருவதையும் கூறிக் கடைசியில் முருகோனே! மால்மருகோனே! இதனின்றும் என்னைக் காப்பாற்று என்று முடிப்பார். வெல்லுஞ்சொல் கொல்லுங்கண். வேட்கை நகை, குறுகிய நெற்றி, இருண்ட குழல், திரண்ட தனம், மருட்டும் விழி, மதுர இதழ், இவைகளை அவர்கள் துதித்திருப்பதைவிட, அளவிலே, ஆறுமுகனையோ, அவரின் ஐயனையோ துதித்திருக்கும் அளவு, குறைவாகத் தான் இருக்கும்! பாயாசமுடன் விருந்துண்டான பிறகு, தெருத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, "என்னமோ, பசி அடங்கக் கொஞ்சம் சாப்பாடு! அவ்வளவுதானே வேண்டும். அந்தச் சாப்பாடு எதுவாக இருந்தால் என்ன, கூழானாலும் கும்பி நிரம்பினால் போதும்" என்று கூறும் குறும்பரின்செயலை நினைவிற்குக்கொண்டு வரும், புராணிகர்களின் சொல்!

## அறிஞர் அண்ணா

ஆண்டவனின் செயலை வர்ணிக்கும் இடத்திலும் பெரும்பகுதி, ஆடவர் சம்பந்தப்பட்ட சமயங்களிலே, குத்து, வெட்டு, அடி, பிடி, நசுக்கு, வெல், கொல் என்ற செயல்கள் செய்தாரென்றும், மாதர் சம்பந்தப்பட்ட இடங்களைக் குறிக்கும்போது, குலவு, தழுவு, கூடு, பாடு, இளகு, பழகு, விரும்பு, நெருங்கு, ஆரத்தழுவுதல், இடைசோர ஆடுதல், நிலவில் குலவுதல், புனலாடுதல், கானம் பாடுதல், என்பன போன்ற செயல்களைச் செய்தனர் என்றே பெரும்பகுதி இருக்கும். அதாவது, இயற்கையாக மக்களுக்கு எத்தகைய வர்ணனைகளைத் தந்தால் சுவை இருக்குமோ என்று அறிந்து சித்தரிக்கப்பட்டிருக்கும். இதனால்தான், புராணங்களை போதை தரும் லேகியம் என்று கூறினோம். போதை உடல் வளத்தைக் கெடுத்து உளவலுவைப் போக்குவது போன்றே, புராணமும் மக்களின் மதியை மாய்த்து விடுகிறது ஆகவேதான், மக்களின் மதிதுலங்க வேண்டும் என்பதிலே அக்கறை கொண்டவர்கள், இந்தப் புராண போதையை உட்கொள்ளாதீர் என்று கூறுகின்றனர். போதையின் சுவையிலே இலயிப்போரும், அந்தப் பொருளை விற்போரும் இருப்பது போலவே, புராண மயக்கத்திலாழ்ந்தவரும், புராணத்தை வாணிபம் செய்பவரும் உளர். அவர்கள் ஆயாசமடைவதற்குக் காரணம் இருக்கிறதல்லவா! அவர்களின் ஆயாசத்தை எண்ணி நமது நோக்கத்தைவிட்டுவிட முடியுமா, விட்டு விடுவது முறையாகுமா? நாமோ, சரிந்துகொண்டிருக்கும் சமுதாயத்தைச் சீராகத் திருத்தி அமைக்க விரும்புகிறோம். தாழ்நிலை அடைந்த இனத்தவர் மீண்டும் தலைதூக்கி வாழ வழிகாண விழைகிறோம். இங்ஙனம் முயற்சி செய்யாத காரணத்தால், முன்னாளில் முடிதரித்து வாழ்ந்த இனம் இன்று மூலையில்உலாவும் காட்டுமிராண்டிகளாகிவிட்டதைக் காணும்போது, நமது கடமையைச் செய்தாக வேண்டும் என்ற எண்ணம்மட்டுமல்ல, அதனைத் துரிதமாகச் செய்தாக வேண்டும், துளியும் தயக்கமின்றிச் செய்தாக வேண்டும் என்ற உறுதிபலப்படுகிறது. தொதவரின் நிலை என்ன ஆயிற்று? சிகப்பு இந்தியர் நிலை என்ன ஆயிற்று? ஏன் அவர்கள் அக்கதிக்கு ஆளாயினர்? என்பதன் "சூக்ஷமத்தை" ஆராய்ந்தால், மூடிவைத்தது, கேடுதானாகப் போய்விடும் என்று இருந்தது, ஆகியவைகளே, அந்த இனங்

களை அழித்துவிட்டன என்பதை உணரலாம்.

★

புராணத்திலே உள்ள கருத்துகளில் பல நாளா வட்டத்திலே, மறைந்து விடுகின்றன என்பதும், பொது அறிவு பரவப் பரவ, பல கருத்துகள், எள்ளி நகையாடப் பட்டுத், தள்ளப்பட்டு விடுகின்றன என்பதும் உண்மை. ஆனால் சில கருத்துகள், உரம் குறையாமல் உள்ளன. சிலவற்றுக்கு உரம் தருகிறார்கள். ஏன்? எத்தகைய கருத்துகளுக்கு? எந்தெந்தக் கருத்துகள், ஒரு சிறு கூட்டத்தின் சுகபோக வாழ்வுக்கு வழி செய்கின்றனவோ, ஒரு கும்பல் பாடுபடாது வாழ மார்க்கமாகிறதோ அந்தக் கருத்துகள், காலவேகம், பொது அறிவு பரவுதல் என்பனவைகளால் தாக்கப் பட்டாலும், எந்தச் சிறு கூட்டம், அத்தகைய கருத்துகள் நிலவி இருப்பதால், தங்களுக்கு இலாபம் இருக்கிறதோ, அவைகளைக் கெடவிடாதபடி பார்த்துக் கொள்வதிலும், உரம் போடுவதிலும் கண்ணுங் கருத்துமாக இருக்கிறது, இங்கு அந்தச் சிறு கூட்டத்திடமே, "பிரச்சார யந்திரம்" சிக்கிக்கொண்டிருப்பதால், தங்கள் சுகவாழ்வுக்கு உகந்த கருத்துகள் அழிந்துபடாமல் பார்த்துக் கொள்ள, அவர்கள் யந்திரத்தைப் பயன் படுத்துகிறார்கள்.

★

கம்பவுண்டர் கேசவன், டாக்டர் தாமோதரனுக்குத் தொல்லை தராமல், இதமாகப் பேசி, ஒழுங்காகவே நடந்துவந்தான். "கேசவா! கேசவா!" என்று டாக்டர் ஒரு நாளைக்கு நூறு முறையாவது கூப்பிடுவார். அவனும் அன்பும் பணிவும் தோன்றவே நடப்பான். கேசவன், டாக்டர் தாமோதரனுக்குக் கம்பவுண்டர்தான். ஆனால் தந்தைக்கு மகனாயிற்றே! அவன் தந்தையோ, மணிமந்திர வைத்யர்! அதாவது நோய் தீர மருந்தும் தருவார், மந்திரமும் செய்வார். டாக்டர் நாடி பார்த்து, நாக்கை நீட்டச் செய்து பரிசோதித்து, மருந்து எழுதிக் கொடுத்தான பிறகு, நோயாளி உள்அறைக்கு வந்து, சீட்டைக் காட்டியதும், கம்பவுண்டர் கேசவன் அவனைப் புன்னகையுடன் வரவேற்று உட்காரச் சொல்லிவிட்டு, மருந்து கலக்கிக்கொண்டே பேசுவான்.

"இந்த வயித்துவலி எவ்வளவு காலமாக இருக்குது, சார்"

"அதை ஏன் கேக்கிறிங்க, என்னமோ என் போறுத வேளை, போன கார்த்திகையிலிருந்து இந்தக் கர்மம் என் உசிரை வாட்டுது"

"ஐயோ! பாவம்! ஆமாம், ஏன் இவ்வளவு நாளாக மருந்து சாப்பிடவில்லை?"

"சாப்பிடவில்லையா? இதுவரையிலே என் வயித்துக்குள்ளே, ஒரு கிணறு மருந்து போயிருக்கும். டாக்டர் சேகர், டாக்டர் லோக நாதன், கெவர்மெண்டு ஆஸ்பத்திரி, எல்லாம் முடிஞ்சி, இப்போ இங்கே வந்தேன்"

"ஓஹோ! பல இடத்திலே மருந்து சாப்பிட்டாச்சா, (ஒரு விநாடி மௌனம்) டாக்டர், என்ன செய்கிறார் என்று கொஞ்சம் எட்டிப் பாருங்க."

(பார்த்துவிட்டு வந்து)

"பேப்பர் படிக்கிறார்"

"சார்! ஒரு விஷயம், உங்க மனசோடு போட்டு வையுங்கோ, இப்படிப்பட்ட வயித்து வலிக்கு, மருந்து சாப்பிட்டா மட்டும் போதாது; உடம்பா லொத்தது மருந்தாலே போகும். சிலது, மந்திரிச்சாதான் போகும். மகா தேவ முதலியாருக்கு இரட்சை கட்டின பிறகு தான் வலி நின்றது"

"அப்படியா? எங்கே, மந்திரிக்கிறார்கள்"

"நீங்கள் தப்பாக நினைக்கக் கூடாது. எங்க தகப்பனார்கூட, மந்திரிப்பார்"

"பெயர்!"

"மணிமந்திர அவுஷதாலயம் மன்னார் செட்டியார்"

இந்தப் பேச்சுக்குப் பிறகு, நோயாளி மணிமந்திர அவுஷதாலயம் போகிறான்! கேசவன், கம்பவுண்டரா்க இருந்து டாக்டருக்கு என்ன பயன்?

ஃ ஃ ஃ

இங்கு, இத்தகைய கேசவன்மார் கூட்டம் இருக்கிறது, அவர்கள் புத்துலகக் காரியாலயத்திலேகூடப் பணி புரிவர், ஆனால் பழைமையின் ஏஜண்டாகவே மறைமுகத்தில் வேலை செய்வர். இந்தக் கூட்டமே, புராணக் கருத்துகளிலே, தமது சுயநலக் காரியத்துக்கு ஏற்றவைகள் பழுது படாதபடி பார்த்துக் கொள்வது. இதன் பயனாகவே அந்தக் கருத்துக்கள், நாட்டு மக்களிடை இன்றும் நடமாட முடிகின்றன. இல்லையானால், புராண கால எண்ணங்களிலே, எவ்வளவோ மாறி இருக்க எத்தனையோ விட்டுக் கொடுக்க இதே கூட்டம் தயாராக இருக்க, ஒரு சில கருத்துகளை மட்டும், விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருப்பானேன்? விட்டுவிட மறுப்பானேன்? உலகம் தட்டையாக இருந்தது என்ற எண்ணத்தைக் கொண்டு தான், இரணியாட்சதன், பூலோகத்தைப் பாயாகச் சுருட்டிக் கொண்டுபோய் கடலுக்குள் ஒளித்துவைத்தான் என்று புராணம் எழுதப்பட்டது. இன்று எந்தச் சாஸ்திரியாவது, புராணீகராவது, பூமி உருண்டை வடிவம் என்று பள்ளிக்கூடங்களிலே, போதிக்கப்படுவதைக் கண்டிக்கிறார்களோ? தங்கள் வீட்டுச் சிறுவர்களையாவது. "வேண்டாமடா அந்த விநாசக் கருத்து! வேத புராண இதிகாசாதிகள், அங்ஙனம் கூறவில்லை. அவைகளிலே கூறப்பட்ட கருத்துக்கு மாறாகச் சொல்லப்படும் பாடம், கேவலம் நாஸ்திகம்," என்று கூறித் தடுக்கிறார்களோ? "பூமி உருண்டை" என்று போதிப்பவர்களை நாஸ்திகர்களென்று நிந்திக்கிறார்களோ? வாதுக்கு அழைக்கிறார்களோ? இல்லை! விட்டுக் கொடுத்துவிட்டார்கள். பூமி, தட்டையாகவோ, உருண்டையாகவோ இருக்கட்டும், நமக்கென்ன என்று இருந்துவிட்டார்கள், அல்லது பூமி உருண்டை தான் என்று, ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள், ஆகவே அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும், என்று கூறிச் சமாதானம் பெற்றுவிடுகிறார்கள். ஏன்? இதிலே இலாப நஷ்டக் கணக்குப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை? பூமி தட்டையாக இருக்கிறது என்று நம்பினால்தான் தட்சணை, உருண்டை என்று ஊரார் ஏற்றுக் கொண்டால் கிடைக்காது என்ற நிலைமை இல்லை. சுயநலம், இந்தக் கருத்து மாற்றத்தினால் கெடவில்லை. ஆகவே, தாராளமாகப் புதுக் கருத்தை ஏற்றுக்கொண்டு, பழைய கருத்துக்குச் சீட்டுக் கொடுத்து விடுகின்றனர். ஆனால் வேறு சில பழைய கருத்துகளை மாற்றிக் கொள்ளச் சம்மதிப்பதில்லை, சுயநலமும் அந்தப் பழைய கருத்தும் ஒன்றாக ஒட்டிக்கொண்டிருப்பதால்.

பூமி உருண்டை என்ற புதிய கருத்தை ஏற்றுக் கொண்டதால் பூசுரக் கூட்டம் நஷ்டம் காண்பதில்லை, ஆனால் 'தேவலோகம், என்று ஒரு தனி இடம் கிடையாது, இறந்தவர்கள் அங்கு செல்வது என்பதும் புரட்டு, அப்படி அவர்களை அங்கே குடிஏறச் செய்வதற்காகவே, இங்கு பூதேவருக்குத் தட்சணை தரப்பட்டுச், சில சடங்குகள் செய்யப்படுகின்றன. இது

(12-ஆம் பக்கம் பார்க்க)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மைய அரசும் மைய நீதி மன்றமும் ஆங்கிலத்தில் மட்டுமே நடவடிக்கைகளை நடத்துதல் நேரிது ஆகும். மேலும் வட மாநிலங்கள் பல உயர்நீதி மன்றங்களிலும் இந்திக்கு வாழ்வு வழங்கும் இந்நாளில் இராசமன்னர் குழு இத்தகைய பரிவுரை செய்வது சட்டத் தமிழுக்கும் சட்டத் தமிழ்க் கல்விக்கும் சமாதி கட்டுவதே ஆகும். எனவே, இராசமன்னர் குழுவின் பரிவுரையில் நீதிமன்ற மொழி பற்றிய பகுதி கடுமையாக எதிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இறுதியாகக் குறிப்பிடத்தக்கது மைய அரசு இந்திக்காகவும் செத்த மொழியாகிய சமசுகிருதத்திற்காகவும் செய்யும் செலவுகள் பற்றியதாகும். இச்செலவு ஆண்டுதோறும் பன்னூறு ஆயிரக் கணக்கில் பல்கி வருவது பெரும்பாலான இந்திய மொழிகளை அவமதிக்கும் அநீதியாகும். இது பற்றியும் இராசமன்னர் குழு எவ்வித ஆய்வுரையும் பரிவுரையும் தராதது தாய் மொழிப் பற்று உடைய தமிழர்களைத் தலைகுனியச் செய்வதாகும். உடனடியாக, இந்தி அல்லாத பிற மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டவரை மிகப் பெரும்பான்மையராக வேணும் கொண்ட அறிஞர் குழு ஒன்றை அமைத்து (சாகித்திய அகாதமி, வானொலி, இந்தி பரப்பும் இயக்குநரகம் உட்பட) பல்வேறு நிறுவனங்கள் வாயிலாகவும் செய்யும் செலவுகளைக் கணக்கெடுத்தாக வேண்டும். இச்செலவுகள் தேவையற்றன என்றும் அறுதியிட்டு உறுதி செய்ய வேண்டும். மைய ஆட்சி மொழி ஆங்கிலமே என்று முடிவு செய்யப்படும் நிலையில் இந்திக்காக இந்தி மாநிலங்களே செலவு செய்தல் வேண்டும், செத்த சமசுகிருதமும் மைய அரசின் தனிச் சலுகைக்கு எந்த வகையிலும் தகுதியுடையதன்று. எனவே, இவ்வகையில் இராசமன்னர் குழு பேசாததை அக்குழுவை அமைத்த அரசும் அந்த அரசை அமைத்த மக்களும் பேசித் தீர வேண்டும்—பேசித் தீர்க்க வேண்டும்.

இக்குறைகளை எல்லாம் குறைவின்றிக் குறிப்பிடும் நிலையில் இராசமன்னர் குழு செய்திருக்கும் பரிவுரைகளில் மூன்றாவதான உயர் நீதி மன்றங்களைப் பற்றிய பரிவுரை தவிர ஏனைய நான்கு பரிவுரைகளும் மனமார ஏற்கத்தக்கன இந்நான்கு பரிவுரைகளாலும் இந்திய மொழி வருங்காலம் ஒளியுடையதாய் அமையும். நாடாளு மன்றத்தின் எட்டாவது பட்டியலில் உள்ள எந்த மொழியிலும் உரையாற்றலாம் என்ற உரிமைக்கு பரிவுரை வழங்கியிருக்கும் இராசமன்னர் குழு அம்மன்றத்தில் ஒரே நேரத்தில் பல மொழிகளிலும் உரைகளை மொழி பெயர்ப்பதற்கு—ஒரே நேரப் பன்மொழி ஆக்கத்திற்கு — உரிய வசதிகளைச் செய்ய வேண்டு மென்பதையும் வற்புறுத்தியிருக்க வேண்டும்.

இக்கட்டுரையில் எடுத்துக் காட்டப் பெற்ற குறைகளையும் நீக்கி இராசமன்னர் குழுவின் பரிவுரைகள் உடனடியாக நடைமுறைக்குச் சட்டப்படிக் கொண்டு வரப்படுமானால்தான் இந்திய நாட்டின் விடுதலை இந்திய மொழிகள் பெற்ற விடுதலையும் ஆகும். ००


## ஞான ஒளி தேடி …

— சி. பி. கபிலர் —


காலக் குளக்கரையில்
காலளவு பனிநீரில்
கிழிந்த உயிர்த் துகிலால்
ஞானமீன் பிடிப்பதற்கு
காத்திருந்து …காத்திருந்து…
கா கடுக்கக் காத்திருந்து
நனைந்த மனச்சுமையை
இறக்கி வைக்க இயலாமல்
துணைதேடி நடக்கின்றேன்!
துயர்வழியைக் கடக்கின்றேன்!
கால்பட்ட போதெல்லாம
காற்றோடு போவதுபோல்
காலப் புழுதியிலே
கலந்துருளும் செயல்களுக்காய்
சிந்தைப் பெருமலையை
சீரழித்துக் கெடுத்ததன்பின்
விரிந்த மனம் சுருங்கி
வேதனையின் வரவுயர்ந்து
துன்பச் சுமைகுறைக்க
துடியாய் துடித்ததன் பின்
துணைதேடி நடக்கின்றேன்!
துயர்வழியைக் கடக்கின்றேன்!
பன்னீரால் கண்குளித்து
பனியாலே உடல்கழுவி
கள்ளாலே இதழ்குவிந்த
காலமெனும் காலைமலர்
எண்ணமெனும் நாரால்
இதழ்இதழாய் இணைத்திணைத்து
சரமாக்கும் கலையறியா
என் குறையாய்…என்குறையாய்…
கைவிரல்கள் பட்டே
கசங்கிவிட்ட ஞானமலர்
பூழ்திப் பெருவெளியில்
போனதடா கல்லறைக்குள்!
இன்றதற்காய்…இன்றதற்காய்…
ஏக்கக் கனல்மூச்சில்
இதயக் குரலெடுத்து
நாக்கால் இசையமைத்து
நடுவழியில் பாடுகிறேன்!
நடந்துவரும் பாதையெலாம்
நடுநடுங்கிப் பாடுகிறேன்!
அந்நாளில் ;
பளிங்குப் பரப்பினைப்போல்
பகல்ஒளிர்ந்த அலைகளின்மேல்
உச்சிக கருமேக
நிழல்படர்ந்து இருண்டதுபோல்
நவழ்ந்து கிடந்திட்ட
தளிர்போன்ற தூய்மனத்தில்
ஆசை நிழலாடி…
அனைத்தும் இருளாகி…
இன்றதற்காய்…இன்றதற்காய்…
தன்னந் தனிமையி ல
சின்னஞ் சிறுவழியில்
ஞான ஒளித்துணையை
நான் தேடி நடக்கின்றேன்!
ஆம்;
துணைதேடி நடக்கின்றேன்!
துயர்வழியைக் கடக்கின்றேன்!!

★

61 வருட அனுபவ பிரசித்திப் பெற்ற
பரங்கிப்பேட்டை
**வைத்தியம்**
**சென்னையில்**
நேரில் சிகிச்சை பெறலாம்.
ஆலோசனைக்கு:
ஹக்கிம்
**M. M. முஸ்தபா, R.M.P.**
சித்த ஆயுர்வேத யூனானி முறை
ஜனநேந்திரிய சாஸ்த்திரத்தில்
அதிக அனுபவம் உள்ளவர்.



சகலவித சர்ம நோய், ஸ்கலிதம்,
ஆண்மை குறைவு, நரம்புத் தளர்ச்சி,
பெண்களின் மாதவலி,
வெள்ளை படுதல், நீரழிவு வாதம்,
ரத்தக் கொதிப்பு, மூலம், மற்றும்
பல நோய்களுக்கு கைதேர்ந்த
சிகிச்சை பெறலாம்.
நோய் விபரம் எழுதி V.P.P. மூலம்
மருந்து பெறலாம்.
**முகம்மதியா**
**வைத்தியசாலை**
[டிரஸ்ட்]
*130, பிராட்வே, சென்னை-1.*
போன்: 23643
H.O. பரங்கிப்பேட்டை,
தென் ஆற்காடு ஜில்லா.



விரைவில் வெளிவருகிறது!

# 'புரட்சிக் குயில்'

(மாதம் இருமுறை ஏடு)

சிறப்பாசிரியர்: நடிப்பிசைப்புலவர். K. R. ராமசாமி

ஆசிரியர்: தஞ்சை. V. S. ராசு


தென்னவரின் தனித் தலைவர்
அண்ணனின் அடிச்சுவட்டு
கனல் பறக்கும் கருத்துக் கருவூலமாக
கழகத் தோழா—மீண்டும்
உன் கரங்களில் தவழ வருகிறது.

"புரட்சிக் குயில்"

மாண்புமிகு

## ப. உ. ச. பிறந்தநாள்

மலராக வெளிவருகிறது.



ரியர் வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3